1364
1364

சந்திரோதயம்

17 MAR 1941
SCANNED

'காலேஜ் குமாரி'யில் நடிக்கிறதாயிருந்தால் தானென்ன,
இப்படி பல் சுளுக்குவதுபோல் சிரிக்கவேண்டுமா?

உள்நாடு
விலை அணா 1

15-3-41

வெளிநாடு
விலை சதம் 8

தயாராகிறது!



20-ம் நூற்றாண்டின்
இணையிலா சமூக
சித்திரம்

•

பிராக்ஜோதியின்
நவீன சிருஷ்டி

•

காலேஜ்குமாரி

நாகரீக வைபவம்!
படித்த
பெண்களின் கோலம்!
வாலிபர்களின்
திருவிளையாடல்!
எல்லாம் ஒரே ஹாஸ்யம்!
ஒரே சிரிப்பு!

விபரங்கட்கு:

பிராக்ஜோதி
பிலிம்ஸ் லிமிடெட்,
அடையாறு :: மதராஸ்.

ஒரு புனிதமான தினம்!

1941

ஏப்ரல் மீ

12 உ

தமிழ் நாடு ஆவலுடன் எதிர்பார்க்கும்

கதம்பம்

உங்கள் ஊருக்கு வருகிறது

வட தென் ஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு ஜெயலக்ஷ்மி பிக்சர்ஸ், அமிஞ்சிக்கரை.	வட தென் மலபார், திருவாங்கூர், கொச்சின் முதலிய இடங்களுக்கு கனகா பிலிம்ஸ், சேலம்.	மதராஸ் ஸிடி: பிரேமலதா பிக்சர்ஸ், மதராஸ்.

விவரங்களுக்கு :—

கிருஷ்ணா பிக்சர்ஸ்

மதராஸ்

தயாராகிறது :— கஜேந்திர மோக்ஷம்

ஆண்மையின் அமிர்தம்!

கல்வியும், செல்வமும் மலிந்திருப்பினும் காதலிமார் சுகத்தை நுகரப் பெறாதவன், உலகின் சிறந்த செல்வத்தை இழந்தவனாவான். வீரிய வலிமையே உலக சுகங்களின் நுகர்வுக்கு ஆதாரம், ஆரோக்கியம், பலம், புகழ், ஆயுள், குடும்பம், மக்கள் ஆதி எல்லா சுகங்களையும் வீரியத்திற் சிறந்தவனே அடையப் பெறுவான். பெற்றோர்களின் குற்றத்தாலும், தீய பழக்க வழக்கங்களாலும் அரிய வீரியத்தைப் பாழாக்கி, நபும்ஸகத்தை யடைந்து, வாழ்க்கையை வெறுத்து ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு இதோர் மலையாள மூலிகைகளினால் தயாரித்த ஓர் அரிய வரப்ரசாதம்.

"ஜீவானந்த ரஸாயனம்" செட் 1

மிதமிஞ்சிய சம்போகத்தாலும் ஹஸ்தப் பிரயோகத்தாலும், மற்றும் பல துர்காரணங்களினாலும் தாதுவை அதிகமாக நஷ்டமாக்கிக் கொள்வதில் இராஜ உறுப்புகள் பல ஹீனமடைந்து, ஆண்மை குன்றி சிற்றின்ப சுகத்தை அனுபவிக்கச் சக்தியற்றுப் போய் விடுகிறார்கள். மனிதர்களுக்கு வீரிய பலம் குன்றி விட்டாலே! ஆண்மைக் குறைவு, தேக மெலிவு, தாது நஷ்டம், பலஹீனம், சோம்பல், பசியின்மை, தூக்கமின்மை, இடுப்பு வலி, தளர்ச்சி, தேக வெளுப்பு, நபும்ஸகம் முதலிய பல ரோகங்கள் பீடிக்கப்படுகிறது. இவ்வியாதிகளை அறவே ஒழிப்பதற்கு உள்ளுக்கு எமது **"ஜீவானந்த ரஸாயனம்"** சாப்பிட்டுக் கொண்டு புருஷ உறுப்பின்மேல் **"லீலா அதிசயனை"** பூசி வந்தால் ஆண் தன்மை உண்டாகி சிற்றின்ப சுகத்தில் மது நிறைந்த பூக்களை வண்டுகள் விட்டுப் பிரியாதது போல் ஸ்திரீகளை விட்டும் கணவன்மார் பிரியார் என்பதும் நிச்சயம். (இது இரகசிய ஔஷதமாகையால் இதனைப் பற்றி விரிவாய் எழுத இடம் தரவில்லை) 16 வயதுக்கு மேல்பட்ட புருஷர்களும், ருது தோஷமுள்ள ஸ்திரீகளும், **"ஜீவானந்த ரஸாயனம்"** காலை, மாலை சாப்பிட்டு வந்தால் நல்ல குணம் உண்டாக்கும். (சாப்பிட ருசிக்கும்) பத்தியமில்லை.

ஷை இரண்டு மருந்துகள் பூர்ண குணத்திற்கு 40 நாள் மருந்து விலை ரூ. 7-0-0 20 நாளுக்குள்ளது விலை ரூ. 4-0-0

சிலோன், ரங்கோன், சிங்கப்பூர் முதலான வெளிநாட்டிற்கு வி.பி. இல்லை. முன்பணம் பூரா வேண்டும். தபால் செலவு தனி.

அந்தந்த ஊருக்கேற்ற 2 அணாவுக்குள்ள ஸ்டாம்புகள் அனுப்பினால் காதல் ரகசியம், நோயற்ற வாழ்வு முதலிய பல விஷயங்களடங்கிய "சிற்றின்ப சாகரம்" புஸ்தகம் ஒன்று இதர செலவின்றி அனுப்புவோம்.

கடித விலாசம்:—

மலையாள வைத்திய நிலையம்,

தபால் பெட்டி நெ. 53, மதராஸ். (C.)

MALAYALA VAIDYA NILAYAM, P. B. No. 53, MADRAS.

சந்திரோதயம்

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்

"தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" — குறள்

ஆசிரியர் ஜி. ஆர். நாதன்

ஆரம். 5	சென்னை 1941ஆ மார்ச்சு 15உ	முத்து. 16

பொருளடக்கம்

			பக்கம்
பிரிட்டனுக்கு வெற்றி	...	...	4
சினிமா வம்பு	...	"கேமிரா"	8
போட்டா போட்டி	...	"லென்ஸ்"	10
தபால் பெட்டி	...	...	12
யானையும் பூனையும்	...	எஸ். பி.	14
மானிடன் பதர் தானா?	...	"ரஷீத்"	17
மறு சந்திப்பு	...	வி. ச. சே.	21
சொன்னதும் செய்ததும்	...	எம். ஆர். என்.	25
அருணாசலக் கவிராயர்	...	டி. வி. ஜி.	27
வாக்கும் பலனும்	...	சு. ர. ஸ்ரீ.	29
ஞாபக சக்தி	...	ஏ. ஜி. ஆர்.	33
காமப் பித்தன்	...	ஜி. அ.	35
எங்களூர்ப் பாடசாலை	...	என். எஸ். ஸ்ரீ.	39
என் விதி	...	ஆர். சேதுராமன்	45
தரும பூமி	...	எஸ். ஏ. மருதையன்	49

குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல

பிரிட்டனுக்கு ★ வெற்றி? ★

'நிஜமாகவா? பிரிட்டன் சண்டையில் வெற்றி பெற்றுவிட்டதா? ஜெர்மனி தோற்று ஓடிப்போய் விட்டதா?' என்றெல்லாம் கேள்விகள் போட ஆரம்பித்து விடாதீர்கள்!

ஜெர்மனிக்கும், பிரிட்டனுக்கும் இப்பொழுது நடந்து வரும் மகா யுத்தத்தைப் பற்றியோ, பிரிட்டன் அதில் வெற்றி பெற்று விட்டதென்றோ நாம் சொல்ல வரவில்லை.

அமெரிக்காவில், பிரிட்டனுக்கு ஒரு நல்ல வெற்றி கிடைத்திருக்கிற தென்பதைத்தான் இப்பொழுது சொல்ல வந்தோம்.

'என்ன ஆச்சரியமா யிருக்கிறதே! பிரிட்டனுக்கு அமெரிக்காவில் வெற்றி யென்றால், ஏற்கெனவே பிரிட்டனும், அமெரிக்காவும் சண்டை பிடித்துக் கொண்டல்லவா இருக்கவேண்டும்! அப்படி யொன்றும் இருப்பதாகக் காணோமே!' என்று நேயர்கள் முணுமுணுக்கிறாப்போல் தெரிகிறது.

நேயர்களே! சம்சய மொன்றும் படவேண்டாம். இதோ உங்கள் சந்தேகத்தை விலக்கி விடுகிறோம்.

சிறிது காலமாக எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் 'தளவாட இரவல் மசோதா' என்ற வார்த்தைகள் பத்தி பத்தியாய்க் கொட்டை எழுத்துக்களில் அடிக்கடி பிரசுரம் செய்யப்பட்டு வந்ததல்லவா!

அப்படிப் பிரமாதமாய் அடிபட்டு வந்த, அந்த 'தளவாட இரவல் மசோதா' என்பது இப்பொழுது அமெரிக்க செனேட் சபையில் நிறைவேற்றப்பட் டிருக்கிறது. இதைத்தான் 'பிரிட்டனுக்கு அமெரிக்காவில் வெற்றி' என்று குறிப்பிட்டோம்.

இப்பொழுது ஜெர்மனிக்கும், பிரிட்டனுக்கும் நடந்து வரும் யுத்தத்தில் பிரிட்டனுக்கு அமெரிக்கா உதவி செய்வது நலமா, செய்யா திருப்பது நலமா?

விமானங்கள், கப்பல்களை இரவலாகக் கொடுக்கலாமா, வேண்டாமா? பிரிட்டனுக்குத் தேவையான தளவாடங்களை விலைக்கு விற்கலாமா, கூடாதா, என்பது போன்ற பிரச்னைகள் அமெரிக்காவில் வெகு மும்மரமாக நடந்துகொண்டிருந்தன. கடைசியில் ஸ்ரீ ரூஸ்வெல்டின் விடா முயற்சியாலும், நல்லெண்ணத்தாலும் அந்தப் பிரச்னைகள் ஒருவாறு முடிவுக்கு வந்தன. பிரிட்டனுக்கு சாதகமாக 'தளவாட இரவல் மசோதா'வும் தடையின்றி நிறைவேறியது.

இம் மசோதாவால் பிரிட்டனுக்கு அளவற்ற நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்காவின் தொழிற் சாலைகளும், கப்பல் கட்டும் தளங்களும் பிரிட்டனுக்குத் தேவையான ஆயுதங்களையெல்லாம், குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்டின் உத்தரவுப்படி தயார் செய்து கொடுக்கலாம்.

அந்த தளவாடங்களையெல்லாம், அமெரிக்கா பிரிட்டனுக்கு விலைக்கு விற்றாலும் விற்கலாம்; அல்லது தலைவர் இஷ்டப்பட்டால் இரவலாகவோ, வாடகைக்கோ கொடுத்துதவலாம். பிரிட்டன் தளவாடங்களை ரொக்கம் கொடுத்துத்தான் வாங்கவேண்டுமென்ற வரம்பு கிடையாது.

பிரிட்டன் தனது யுத்தக் கப்பல்கள் முதலிய தளவாடங்களை அமெரிக்க கடற்படைத் துறைகளில் கொண்டுவந்து 'ரிபேர்' கூடச் செய்துகொள்ளலாம்.

அது மட்டுமல்ல; பிரிட்டனுக்கு இப்படி எல்லையற்ற வசதிகள் செய்து கொடுப்பதில் ஏதாவது பணச்செலவு ஏற்பட்டால் அதைக் கூட சமாளிப்பதற்கு அமெரிக்கத் தலைவருக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. இந்த நெருக்கடியான சமயத்தில் பிரிட்டனுக்குக் கிடைத்திருக்கும் இந்த வசதிகளெல்லாம் அதற்குப் பெரிய வெற்றியைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை.

பிரிட்டனுக்குப் பெரிய வெற்றியைக் கொடுக்கும்படியான பெரிய உதவியைச் செய்து கொடுத்ததற்கு அமெரிக்காவைப் பாராட்டாமலிருக்கமுடியாது.

ஆனால் அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவி செய்வதில், அமெரிக்காவுக்கு என்ன பிரயோஜனம், என்று கேட்கலாம். 'ஆதாயமின்றி செட்டியார் ஆற்றோடு போவாரா?' என்பதும் 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?' என்பதும் பழமொழிகள்.

நாமும், 'ஆதாயமின்றி அமெரிக்காவின் குடுமி ஆடுமா?' என்ற புதுமொழியைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். உலகில் யாரும் சுயநலமின்றிப் பிறருக்கு உதவி செய்வது துர்லபம்.

அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவி செய்வதிலும் நிறைய சுயநலம் இருக்கிறது. இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் ஒருவேளை ஜெர்மனி ஜயித்துவிடுவதாக வைத்துக்கொண்டால், பிற்காலத்தில் அது அமெரிக்காவின்மீது ஆக்ரமிப்பை நடத்தாது என்று யாரும் எண்ண முடியாது. அப்படி ஜெயித்துவிட்டால் பின்பு அமெரிக்கா, பொருளாதாரத்திலும், செல்வாக்கிலும் ஜெர்மனியின் தயவை எதிர்பார்க்கும் நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவுக்கு உலகில்தற்போதுள்ள ஏராளமானசெல்வாக்குக்கு ஒரு சிறிதும் பாதகம் உண்டாகக் கூடாதென்றால், ஜெர்மனி அவசியம் தோற்றுகவேண்டும். எனவே பிரிட்டன் வெற்றி பெறுவதைத்தான் அமெரிக்கா விரும்பவேண்டி யிருக்கிறது. மேலும் ராணுவத் தேவைகள்—பொருளாதாரத் தேவைகள் இவை யிரண்டும் பிரிட்டனுடைய வெற்றி, அமெரிக்காவுக்கு அத்யாவசிய மானதுதான் என்ற ஒரு நிலைமையை உண்டாக்கி யிருக்கின்றன.

ஆகவே ரூஸ்வெல்ட் பிரிட்டனுக்கு இவ்வளவு அக்கரையாக உதவி செய்ய முன்வந்ததில் யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

ஒரு வீடு பற்றி எரிகையில் பக்கத்து வீட்டுக்காரன் 'அவன் வீடுதானே தீப்பிடித்துக் கொண்டது! நமக்கென்ன?' என்று பேசாதிருக்க முடியாது. அப்படியிருந்தால் அந்த நெருப்பு அடுத்த நிமிடம் பக்கத்து வீட்டுக்கும் பரவா மல் போகாது.

ஆகையால் தன் வீடு பத்திரமாக இருக்கவேண்டுமானால் அவன் எரியும் வீட்டில் உள்ள நெருப்பை அணைப்பதில் தானும் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி உதவி செய்வதில் எரியும் வீடு காப்பாற்றப் படுவதோடு, தன் வீடும், தானும் க்ஷேமமாக இருக்க வசதி கிடைக்கிறது. எனவே சுயநலத்துக்காகவாவது அவன் பக்கத்து வீட்டு நெருப்பை அணைக்கத் தான்வேண்டும்.

அமெரிக்கா இப்பொழுது பிரிட்டனுக்கு உதவி செய்வது இந்தக் கருத்தை வைத்துக் கொண்டுதான். ஆனால் ஜனநாயகத்தைக் காப்பாற்றத் தான் அமெரிக்கா உதவிசெய்கிறது என்று யாராவது எண்ணினால் அது தவறுதான். சுயநலம் காரணமாகவே அமெரிக்கா 'பரோபகாரார்த்தம் இதம் சரீரம்' என்ற கொள்கையில் இறங்கி யிருக்கிறது.

'காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது' என்று கூறுவார்கள். அது போல அமெரிக்கா தன் தற்காப்புக்காகவே பிரிட்டனுக்கு உதவிசெய்தும், ஜன நாயகத்துக்காகத்தான் அமெரிக்கா உதவுகிறது, என்று வெளியுலகத்தின் கண் களுக்குத் தெரிகிறது. ரூஸ்வெல்ட்டும் ஜனநாயகத்தைக் காக்கப் பாடுபடுவ தாகச் சொல்லிக் கொள்ள முடிகிறது.

'அம்மி குத்தினாலும், பொம்மி குத்தினாலும் நமக்கு வேண்டியது அரிசி' தான். அதுபோல் எது எப்படிப் போனாலும் பிரிட்டனுக்கு வேண் டியது உதவிதான். அது இப்பொழுது கிடைத்துவிட்டது.

ரூஸ்வெல்ட்டின் அரிய முயற்சியால் இப்பொழுது அமெரிக்காவானது பிரிட்டனின் ஆயுதச் சாலையாக மாறிவிடுகிறது. இப்போது ஹாலந்து, பெல்ஜியம், போலந்து, நார்வே, கிரீஸ், அபிஸீனியா முதலிய குட்டி நாடு களின் கதிமோட்சம், பிரிட்டனின் வெற்றியையே பொறுத்திருக்கிறது. அவைகளுக்கெல்லாம் பிரிட்டன் யுத்தக் காரியாலயமாகவும், சுதந்திரப் போரின் முக்கிய படை நிலையாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரிட்ட னுக்கு அமெரிக்கா ஆயுதக் கிடங்காக மாறுவதுபற்றி நாம் சந்தோஷப்பட வேண்டியதே!

ஆனல், ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரப் படை நிலையாக இருக்கும் பிரிட்டன் ஏழை இந்தியாவின் சுதந்தரத்துக்கும் படை நிலையாக இருக்கிறதா?

இந்தக் கேள்வியை இந்தியர்கள் கேட்டால் பிரிட்டன் மூக்கின்மேல் விரலைவைத்து ஆச்சர்யப்படுகிறது. அப்படி அது மூக்கின்மீது விரலை வைப்பதுகூட, தலையை ஒரு சுற்றுச் சுற்றித்தான் வைக்கிறது.

இந்தியர்களின் கேள்வி பிரிட்டனுக்கு ஆச்சரியத்தை மட்டும் கொடுக்கவில்லை; அருவருப்பையும் கொடுக்கிறது.

'என்ன, இந்த இந்தியர்கள் அடிமைகளாக இருந்துகொண்டு சுதந்திரம் கேட்கிறார்களே? நம் போன்ற சுதந்தர தேசமல்லவா, சுதந்தரத்துக்கு ஆசைப்படவேண்டும்?' என்று பிரிட்டன் நினைக்கிறது.

அப்படி நினைப்பது மட்டுமல்ல; 'உங்கள் லக்ஷியம் என்ன?' என்று கேட்கும் இந்தியர்களை ஜன நாயக முறைப்படி(?) சிறையிலும் தள்ளி வருகிறது.

பிரிட்டன் அமெரிக்காவின் உதவிகளைப் பெற்றது ஒரு பெரிய வெற்றியுமல்ல; பெரிய காரியமு மல்ல. இந்தியர்களின் முழு உதவியையும் பெறும் பொழுதுதான் பிரிட்டனுக்குப் பரிபூரண வெற்றி கிட்டும்.

ஆகையால் இந்தியத் தலைவர்களின் சந்தேகங்களை பிரிட்டன் விரைவில் தீர்த்து, தனக்கும், இந்தியாவுக்கும் சேர்ந்தாப் போல் வெற்றியை உண்டாக்கிக் கொள்வது தான் புத்திசாலித்தனம். அதைவிட்டு பிரிட்டன் சுயநலத்தையே பாராட்டிக் கொண்டிருக்குமானல், உலகம், 'பிரிட்டனுக்கு வெற்றி' என்பதற்குப் பின் ஒரு (?) கேள்விக் குறியையும் சேர்த்துக் கொண்டு சந்தேகக் கண்களுடன் தான் பார்க்கவேண்டி யிருக்கும்.

ரூ. 3—4—0-க்கு 450 அழகிய வெகுமதி சாமான்கள்

சரியான நேரம்காட்டுவதும், 5 வருடம் உத்திரவாத முள்ளதுமான நமது அழகிய பாக்கெட் கடிகாரம் ரூ. 3—4—0. மேல் கண்ட கடிகாரம்



வாங்குகிறவர்களுக்கு, ஒரு அழகிய தங்கக் கில்ட்டுள்ள டம்மி கைக் கடிகார மொன்றும், 300 அடி வெளிச்சம் காட்டும் டார்ச் லைட் ஒன்றும், 14Ct ரோல்டு கோல்டு நிப்புள்ள ஒரு பவுண்டன்பேனவும், ஒரு டம்மி டைம்பீசும், பிரஷ் சோப்புடன் கூடிய சேப்டி ரேசரும், 4 தங்கக் கில்டு பொத்தான்களும், இன்னும் அழகிய 440 சாமான்களும் அளிக்கப்படும்.

பாக்கிங் & போஸட்டேஜுக்காக அணா 12 தனி.

AMERICAN COMMERCIAL STORES, Post Box No. 12213 CALCUTTA.

சினிமா வம்பு

"கேமிரா"

2–3–41 ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை சௌந்தர்ய மஹாலில் 'பலக்' கச்சேரிநடந்தது. அதில் மாஸ்டர் சந்தானம் தம் சகாக்களுடன் அற்புதமான பல வித்தைகளைக்காட்டினர். தம் தேகத்திலுள்ள தசைகளைத் தம் இஷ்டப்படி ஆட்டி வைத்துக்காட்டியதும், தேகக்கட்டுகளைக் காட்டியதும் வெகு அற்புதமாயிருந்தன. பிறகு திருமதி டி. எஸ். ஞானம்பாள் அம்மையார் அவர்களின் பாட்டுக் கச்சேரி கேட்க இனிமையா யிருந்தது. கடைசியில் புரொபசர் திரிவேதி அவர்கள் ஒரு கம்பத்தில் செய்து காட்டிய பல பாய்ச்சல்களும், கத்திகளைக் கையில் வைத்துக் கொண்டு, அக் கம்பத்தில் பாய்ந்தேறியது, இருபுறமும் எரியும் தீவட்டிப் பந்தங்களை வாயிலும் கையிலும் வைத்துக்கொண்டு தேகத்திலாவது, கம்பத்திலாவது படாமல் கம்பத்தினிடம் போட்ட குஸ்திகளும் ஆச்சரியமாயிருந்தன. கடைசியில் தலைமை வகித்த திரு. லாட் கோவிந்ததாஸ் அவர்களுக்குப் பதிலாக வந்திருந்த அவர் புதல்வர், புரொபஸர் திருவேதி அவர்களை மிகவும் பாராட்டிப் பேசி, அவர்களனைவருக்கும் வெள்ளிக் கோப்பைகள் பரிசாக வழங்கினர். புரொபஸரவர்கள் இந்தியிலும், தமிழிலும் தேகாப்யாசத்தின் அவசியத்தைப் பற்றியும், அதைத் தென்னாட்டவர்கள் கவனியாதிருப்பதன் குறைகளைப்பற்றியும் சொன்னர். பிறகு, தாம் ஒரு தேகாப்யாசப் பள்ளிக்கூடம் விரைவில் சென்னையில் திறக்கப் போவதாகவும், அதில் அனைவரும் சேர்ந்து திடமக்களாக வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு தலைவரவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வணக்கம் கூறினர். இவர் செய்து காட்டிய உடற்பயிற்சி வித்தைகள் பெரிதும் மெச்சத் தகுந்தனவாக இருந்தன.

* * *

சென்னையில் ஸேவா பிலிம்ஸ் என்றொரு படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் முதல் முதலில் "ஷிரின் பெராட்" என்ற

காதல் கதையை தமிழ்ப் படமாகத் தயாரிக்கப் போகிறார்களாம். இதில் பிரபல சினிமா நடிகர் பி. யு. சின்னப்பா, நீண்ட் நாட்களுக்குப் பின் மறுமலர்ச்சி யடைந்த சி. எஸ். ஜெயராமன், எம். எஸ். விஜயாள், கே. பாலசந்திரிகா முதலியவர்கள் முக்கிய பாத்திரமேற்று நடிப்பார்களாம்; இதற்குப் பிரபல எழுத்தாளர் ஸ்ரீ. கு. ப. ரா. வசனமும், கம்பதாஸன் என்ற ஸ்ரீ. சி. எஸ். ராஜப்பா கதை பாட்டு முதலியவையும் எழுதியிருக்கிறார்கள்.

* * *

ஞானகி பிக்சர்சாரின் தெலுங்கு சூடாமணி படப்பிடிப்பு பிராக் ஜோதி ஸ்டுடியோவில் வெகு துரிதமாக நடந்து வருகிறது. இப்படத்தை ராஜா சாண்டோ டைரெக்ட் செய்கிறார். இப்படத்தில் ஸ்ரீமதி புஷ்பவல்லி பிரதம பாகமேற்று நடிப்பதாகத் தெரிகிறது.

* * *

சென்னை சுகுமார் பிக்சர்ஸார் கூடிய சீக்கிரத்தில் "காதம்பரி" என்ற தமிழ்ப்படத்தைத் தயார் செய்யப் போகிறார்களாம்; இப் படம் சென்னையில் பிரபல ஸ்டுடியோ ஒன்றில் எம். எல். டாண்டன் அவர்களால் டைரெக்ட் செய்யப் படுமெனத் தெரிகிறது.

* * *

மாம்பலம் பாப்பா பிக்சர்ஸார் முதல் முதலில் "கன்னிகா பரமேஸ்வரி" என்ற ஒரு புராணக் கதையைத் தமிழ்ப் படமாகத் தயாரிக்கப் போகிறார்களாம். இதில் பிரபல சினிமா நடிகர்கள் நடிப்பார்களெனத் தெரிகிறது. இது சென்னையிலேயே பிரபல ஸ்டுடியோ ஒன்றில் பிடிக்கப்படுமெனவும் தெரிகிறது.

* * *

பெங்களூர் காண்டினென்டல் பிக்சர்ஸாரின் "கங்காவதாரம்" படப்பிடிப்பு அடையார் சுந்தரம் ஸ்டுடியோவில் வெகு துரிதமாக நடந்து வருகிறது. இது ஒரு உன்னதப் படமாக வெளிவருமென எதிர்பார்க்கப் படுகிறது.

* * *

ரோஹிணி பிக்சர்ஸாரின் "நவீன தென்னாலிராமகிருஷ்ணா" தெலுங்குப்

படம் முடிவடைந்து இம்மாதம் 22உ முதல் ஆந்திர தேசங்களில் வெளியிடப்படுமெனத் தெரிகிறது. இவர்கள் அடுத்தபடியாக 'ஸத்யமே ஜெயம்' என்ற படத்தைத் தயாரிக்கிறார்களாம்; இப்படம் சென்னை பிராக் ஜோதி ஸ்டுடியோவில் ஸ்ரீ. எல். வி. பிரஸாத் டைரக்ஷனில் தயாரிக்கப் படுகிறதாம்.

போட்டா போட்டி

''லென்ஸ்''

சர்வம் போட்டா போட்டி மயம் ஜகத். அதிலும் நம் தமிழ் நாட்டு மக்களிடையே இருக்கும் போட்டி மனப்பான்மை உலகத்தின் வேறெந்த பாகத்திலும் இருக்க முடியாது.

ஒருவன் 'ராமு விலாஸ் கபே' வைத்தால் அதைப் பார்த்து இன்னொருவன் 'சோமு விலாஸ் கபே' வைத்து விடுகிறான். இன்னொருவன் 'கிளிமார்க் சுருட்டு' செய்தானானால் மற்றவன் 'புளி மார்க் சுருட்டு' செய்யத் தயங்குவதில்லை. இந்தப் போட்டி நோய் தமிழ்ப்பட உலகிலும் புகுந்து விட்டது வருந்தத் தக்கதாக இருக்கிறது.

சமீபத்தில் 'செல்வமணி பிக்சர்ஸ்' என்பவர்கள் 'ஆரியமாலா அல்லது காத்தவராயன்' படத்தை எடுக்க எல்லா ஏற்பாடுகளும் செய்து படம் எடுக்கவும் ஆரம்பித்து விட்டனர்.

பார்த்தார் இன்னொருபடமுதலாளி. உடனே தானும் அதே கதையைத் தமிழ்ப்படமாக எடுப்பதாக விளம்பரம் செய்துவிட்டார்.

இப்படி ஒரே கதையை இரண்டு கம்பெனியார் படம் பிடிப்பதில் இருதரத்தாரும் நஷ்டம் அடைவதுதான் லாபம். தான் கெட்ட குரங்கு வனமெல்லாம் அழித்த கதையாக, போட்டிப் படம் எடுப்பவர்கள் தங்களுக்கு அளவில்லாத நஷ்டத்தை உண்டாக்கிக் கொள்வதோடு சகோதரப் பட முதலாளியின் வாயிலும் மண்ணைப் போட்டவராகிறார்.

மேலும் புளித்துப் போன புராணங்கள் எடுப்பதில்கூடப் போட்டி போட்டுக் கொண்டு ஒரே கதையை இரண்டு பேர் படம் எடுப்பதில் சினிமா ரஸிகர்களின் அதிருப்திக்கும் ஆளாகின்றனர். பொது ஜனங்களுக்குத் திருப்தியில்லையேல் முதலாளிகள் பை 'காலி' யாகவே யிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

எனவே, தங்களுக்கும் பிறருக்கும் நன்மை தரவேண்டி, இனிமேலாவது பட முதலாளிகள் போட்டா போட்டியை விட்டு 'புது புது' 'நவ நவ' மான கதைகளைப்படங்களாக எடுத்து, சினிமாக் கலையைக் கொலை செய்யாமல் இருப்பார்களாக! போட்டா போட்டி ஒழிக!

தங்கம்

ஒரு தோலா விலை ரூ. 2/- தான்.

●

குறைந்த விலையில்
உயர்ந்த சாமான்.

●

அமெரிக்கன்
புதிய தங்கம்

●

ஒரு தடவை பரீக்ஷித்தால் திருப்தி யடைவீர்கள்.

பத்தான்கோட் ஹஸாரிலால் செவலா எழுதுவதாவது :—

நீங்கள் அனுப்பிய அமெரிக்கன் புதிய தங்கப் பார்சல் கிடைத்தது. வந்தனம். இது அசல் தங்கம் மாதிரியாகவே இருக்கிறது. இதற்கும் அசல் தங்கத்திற்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை. மறு தபாலில் இன்னும் 6 தோலா அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். மேன்மேலும் ஆர்டர்கள் அனுப்புகிறேன்.

இந்தத் தங்கம் மாற்றுக் கல்லில் உறைத்தால் அசல் தங்கம் மாதிரியே காட்டுகிறது. இதை கம்பியாகவும் நீட்டலாம்; தட்டாகவும் அடிக்கலாம். சகல ஆபரணங்களும் இதனால் செய்யலாம். கைதேர்ந்த தட்டார்களும் இதை தங்கம் என்றே மதிக்கிறார்கள். எல்லோரும் வாங்கவேண்டும் என்ற கருத்துடன் தோலாவின் விலையை 2 ரூ. ஆக செய்திருக்கிறோம். 3 தோலா ஒரே தடவை ஆர்டர் கொடுத்தால் ரூ. 5/-. 6 தோலா ஒரே தடவை ஆர்டர் கொடுத்தால் ரூ. 10/8 தான். 20 தோலா ஒரே தடவை ஆர்டர் கொடுத்தால் ரூ. 30/-க்கு அனுப்புகிறோம். இன்றே ஆர்டர் கொடுங்கள். பரீக்ஷித்துப் பாருங்கள்! உடன் மறுபடியும் ஆர்டர் தருவீர்கள். உங்களுக்குப் பிடிக்காவிட்டால் பணம் வாபீஸ் செய்கிறோம்.

கவனிப்பு :—3 தோலாவுக்கும் அதற்கு மேற்கொண்டு ஆர்டர் கொடுத்தால் தபால் சார்ஜ் இனாம். 6 தோலா ஆர்டர் கொடுத்தால் அமெரிக்கன் கோல்டை கொண்டு தயாரித்த வளையல் இனாம். 20 தோலா ஆர்டர் கொடுத்தால் ஒரு கைக் கடியாரம் இனாம்.

இன்றே ஆர்டர் செய்யுங்கள். தாமதம் செய்யாதீர்கள்.

Sole Agents :—

Anglo Indian Chemical Works (C.T.M.)

JULLUNDUR CITY.

தபால் பெட்டி

சந்திரோதயம் தபால்பெட்டிக்கு 'ஏமாந்தவன்' எழுதிக் கொள்வது:—

அன்புள்ள ஐயா,

தங்களிடம் சில சந்தேகங்களைக் கேட்க முன் வந்ததற்கு மன்னித்து, தயவுசெய்து பதில் எழுத வேண்டுகிறேன்.

அதாவது நான் **தென்னிந்திய ரேடியோ நிலையங்களுக்கு** நாடகம், கதை, வியாசம் முதலியவைகளைப் பலமுறை அனுப்பிவந்தேன். அவைக ளெல்லாம் வெகுநாட்கள் 'கிணற்றில் போட்ட கற்கள்' போல் இருந்துவிட்டு இறுதியில் 'சுவரிலடித்த பந்து' போல் திரும்பி வந்துவிட்டன.

அவைகள் மிகமிக நன்றாயிருந்தன, என்று நான் சொல்லவரவில்லை. ஆனால் தற்காலம் ரேடியோக்களில் ஒலிபரப்பப்படும் சில கண்ட்ராவியான—ஆபாசமான—உப்பு சப்பில்லாத—தலையும் வாலில்லாத நாடகங்கள் கதை களைப்போல் **நிச்சயம் இல்லை** என்று கூரைமேலிருந்தும் கூறத் தயார்.

அப்படியிருந்தும் ரேடியோ நிலையத்தார்களுக்கு ஆபாஸமானவைகள் மட்டும் மனதுசகுப் பிடித்து—மற்றவைகள் பிடிக்காமல் போவதேன்?

ரேடியோவில் உள்ள **சிலர்** லஞ்சம் வாங்குவதாகக் கேள்விப்படுகிறேன், அந்த லஞ்சம் கொடுக்காததால்தான் என் நாடகங்கள் திரும்பிவந்து விட்டனவா? அல்லது ரேடியோ நிலையத்திலுள்ள **சிலருக்கு** நான் சிநேகிதனாக இல்லாததால் நிராகரிக்கப்பட்டனவா? இவைகளுக்கு உங்களால் முடிந்தால் பதில் அளிக்கவும்.

"ஏமாந்தவன்"

ஏமாந்த நண்பரே,

கடிதம் கிடைத்தது. ஆனால் இதை நீங்கள் அந்தந்த ரேடியோ நிலையத் தாருக்கே எழுதியிருந்தால் உங்கள் சந்தேகம் தெளிவாகியிருக்கும்.

பொதுவாக சர்க்கார் உத்தியோக வட்டாரங்களிலேயே 'மாமூல்' வாங்கும் வழக்கம் இருந்துவருவது யாவரும் அறிந்த விஷயமே. அந்த வியாதி சர்க்கார் சம்பந்தப்பட்ட ரேடியோ நிலையத்தில் மட்டும் இல்லாதிருக்குமென்று நினைப்பது தவறு.

ரேடியோ நிலையத்திலுள்ள **சில சுயநலப் புலிகள்** நண்பர்களுக்கும், பந்துக்களுக்கும் தான் முதல் சலுகை வாங்கித் தருகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சந்தான். அத்துடன் அவர்கள் 'லஞ்சம்' என்ற பேய்க்கும் அடிமைகள்தான் என்பதையும் நான் அறிவேன். சில குறிப்பிட்ட நபர்களுக்கு 'பக்ஷீஸ்' கொடுத்தால்தான் ரேடியோவில் உமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

அல்லது அவர்களில் சிலருக்கு நீர் மிக வேண்டியவராகவாவது இருக்க வேண்டும். இது இரண்டும் இல்லாவிட்டால் நீர் ரேடியோவில் தலைநீட்டவே முடியாது.

ரேடியோ நிலையங்களில் உள்ள புல்லுருவிகளான சுயநலப் புலிகளால் அந்த ஸ்தாபனங்களுக்கே கெட்ட பெயர் உண்டாகத்தான் செய்கின்றன. அந்த 'மாமூல்' ஆசாமிகளைக் கொஞ்சம் சர்க்கார் கவனித்தால்தான் உம் போன்றவர்கள் ஏமாறாமல் இருக்க முடியும்.

இப்படிக்கு,

"தபால் பெட்டி"

Cash Reward Rs. 1,550

SIDH VASHI KARAN CHARM

Any person, male or female whom you love, howsoever obstinate or indifferent towards you, shall become obedient to you and will love you sincerely.

Price: **Gold case Rs.6-8, Silver case Rs.2-12**
Copper case Rs. 1-15

LAKSHMI CHARM.........those persons who need wealth are recommended to try this charm. It removes and acts against the evil influence of stars, thereby brings you good luck. In short it gives profit in trade, success in lottery, victory over enemies, success in examination and litigation, secures service and does a lot for the possessor. Those who wish children should wear two charms one for male and the other for female. Price copper case **Rs. 1-15. (Rs. 5** for three) Silver case. **Rs. 2-12.** Golden case **Rs. 6-8.** In order to achieve 4 objects with one ask for our super powerful charm

No. 5 for Rs. 7-8 **(Postage Extra in Each case)**

Note :—1. Anybody proving it untrue will be given Rs. 1,550. In case the charm fails price will be refunded.
2. For using these charms no preparations are required and no hardships are to be undergone.

Address: **PROF. H. LAL JOTISH ASHRAM (C.T.M.)**
PATHANKOT (INDIA)



யானையும் பூனையும்

எஸ். பி.

“அட, ராமா! ராத்திரி வேளையில் கண்ணே தெரியமாட்டேங்கறதே. கடவுள் இவ்வளவு பெரிய தேகத்தைக் கொடுத்துட்டு, இத்துனூண்டு கண்ணைக் கொடுக்கவேண்டாம்!” என்று காட்டூர் சமஸ்தானத்து யானை தனக்குத்தானே சொல்லிக் கொண்டது. அது காட்டில் தனியாக அகப்பட்டுக் கொண்டது. அன்று நன்றாக மழைவேறு பெய்திருந்ததால் வழியெல்லாம் ஒரே சேறாக இருந்தது. இருட்டோ மையைப் போலிருந்தது. முழங்காலுக்கு மேல் சகதியில் அகப்பட்டுக் கொண்டால் சுலபமாக நடக்க முடியுமா, என்ன! “அட, இந்த அல்பத் தேங்காய்க்குத் திருட்டுத்தனமாக வந்தோமே. அரண்மனையில் நமக்கு எவ்வளவு செளகர்யங்கள் இருக்கின்றன! மற்ற யானைகளுக்குத் தெரிந்து விட்டால் விழுந்து விழுந்து சிரிக்குமே!” என்று யானை தன்னைத்தானே நொந்து கொண்டது.

“யானையாரே, செளக்கியமா?” என்று யாரோ தன்னைக் கூப்பிடவே யானை சுற்றுமுற்றும் பார்த்தது. இரண்டு கண்கள் இருட்டில் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. யானைக்கு அப்போதுதான் புலப்பட்டது. அது கோவில் பூனை. “என்ன, ஸார், என்ன, பகீரதன் மாதிரி சேத்துலே நின்னுண்டு தபஸ் பண்றாப்போலிருக்கே?” என்று சொல்லிப் பூனை ‘கெக்கே புக்கே’ யென்று சிரித்தது. யானைக்கு வந்த கோபத்தில் பூனையைச் சட்னி பண்ணி விடலாமா வென்று கூடத் தோன்றிற்று. ஆனால், இப்போது அதன் தயவு அத்தியாவசியமாயிற்றே! “அதெல்லாம் ஒண்ணுமில்லை. உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு நீ வழி காட்டினால் தேவலை” என்றது யானை.

“உன்மேல் ஏறிக் கொண்டுதான் நான் வழி காட்டுவேன்!” என்று ஒரு போடு போட்டது பூனை.

யானைக்கு இதைக் கேட்டவுடன் கோபம் வராமலிருக்குமா? ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ள முடியவில்லையே!

"சரி, சரி, ஏறிக்கோ!" என்றது யானை. பூனை குடு குடு வென்று ஓடி வந்து, சரேலென்று யானையின் முதுகின் மேல் தாவிற்று.



பூனைக்கு வந்த குஷிக்குக் கணக்கு வழக்கில்லை. "இப்படிப் போ, அப்படிப்போ!" என்று ஆடம்பரத்துடன் ஏவிக்கொண் டிருந்தது.

கடைசியில் யானையும் நகரம் வந்து சேர்ந்தது. "பூனையே, உனக்கு மிகவும் வந்தனம். என்னை எப்போ வேண்டுமானாலும் வந்து பார்" என்று சொல்லிப் பூனையிடம் விடை பெற்றுக் கொண்டது.

மறுநாள் அந்த சமஸ்தானத்திலுள்ள பூனைகளெல்லாம் ஒரு வரவேற்புப் பத்திரம் அளித்து, அதை மிகவும் பாராட்டின. அதனால் ஏறின பூனைக்கு வந்த இறுமாப்புக்குக் கணக்கு வழக் கில்லை. "என் சகோதர சகோதரிகளே! நாளைக்கே நான் மறு படியும் காட்டின் வழியாக அதே யானையின் மேல் சவாரி செய்யப் போகிறேன். நீங்களெல்லோரும் சாயந்திரம் வேடிக் கை பாருங்கள்!" என்று மார்தட்டிப் பேசிற்று. மற்ற பூனை களும் பலத்த கரகோஷம் செய்தன.

மறுநாள் பூனை யானையிடம் மெதுவாகச் சென்றது. "வா, வா! சௌக்கியமாயிருக்கிறாயா?" என்று யானை கேட்டது.

"சௌக்கியந்தான்" என்றது பூனை.

"எங்கே இப்படி வந்தே?" என்று கேட்டது யானை.

"ஒண்ணுமில்லே. உங்களுக்குத்தான் தேங்காய் ரொம்பப் பிடிக்குமே! காட்டின் நடுவில் ஆயிரம் தேங்காய் கொண்ட ஒரு தென்ன மரம் இருக்கு. வேணும்னு இன்னிக்கு அங்கே போங்களேன்" என்றது பூனை.

யானைக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று. "அப்படியா, அது எங்கேயிருக்கு? நீ அழைச்சுண்டு போயேன்" என்றது யானை.

"தங்கள் முதுகில் ஏறிக் கொண்டால்தான் நான் வழி காட்ட முடியும்" என்றது பூனை. "சரி, அப்படியே ஏறிக்கோ" என்றது யானை.

பூனையும் ஏறிக்கொண்டது. ஆனால், இந்தக் காக்ஷியைப் பார்க்க லக்ஷக் கணக்கான பூனைகள், திரள் திரளாகக் கூடி வேடிக்கை பார்த்தன. யானையைப் பார்த்துச் சிட்டியடித்தன. சில பூனைகள் தைரியமாக யானையின் பக்கத்தில் வந்து பரிகாசம் செய்தன.

யானைக்கு அப்போதுதான் விஷயம் புரிந்தது. சவாரி செய்து கொண்டிருக்கும் பூனை, யானையைப் பார்த்து, "ஸார், நேக்கு வழி மறந்து போச்சு. மரத்தை இன்னிக்குக் கண்டுபிடிக்கிறது கஷ்டமாயிருக்கும் போலிருக்கு. நீங்கள் எதுக்கும் இந்த நதிப் பாலத்தைத் தாண்டிவிடுங்கோ. அப்பறம் நான் சொல்றேன்" என்றது.

"இதோ நதியைத் தாண்டுகிறேன்" என்றது யானை.

பூனைகளெல்லாம் யானையைத் தொடர்ந்து வந்தன. ஆனால் யானை பாலத்தின் மேல் போக வில்லை. நதியில் நீந்திச் செல்ல வாரம்பித்தது. வெள்ளமோ கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. பூனைக்கு மிகுந்த திகிலுண்டாயிற்று, "ஐயோ, யானையாரே, என்னை மன்னிக்கணும், என்னால் ஜலத்தில் மூச்சு விட முடியவில்லை!" என்று கதறிற்று. யானையின் துதிக்கை மாத்திரம் ஜலத்தின் மேல் தெரிந்தது.

"போனால் போகது. இனிமேல் பொய் சொல்லாதே, உன் யோக்கியதையை அறிந்து கொண்டு, அதன் பிரகாரம் நடந்து கொள்! நேற்று நீ செய்த உதவிக்காக இன்று உன்னை மன்னிக்கிறேன்" என்று சொல்லி, யானை தன் துதிக்கையால் பூனையைக் கரையில் சுழட்டி எறிந்தது. "செத்தேன், பிழைத்தேன்!" என்று பூனை ஓடிவிட்டது. அதன் சகாக்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

மாண்டன் பதர்தாரு?

ஏ. எம். ரஷீத்

"பல மிருகங்களின் வேண்டுகோளிற் கிணங்க இன்று நமது தர்பார் கூட்டப்பட்டிருக்கிறது. மேலும் இன்று ஒரு நாட்டு மிருகம் வந்து தன்னையும் காட்டு மிருகங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டது.....முதலில் அதைக் கவனித்து, பிறகு உங்கள் குறைகளைக் கவனிக்கிறேன்......"

மிருகேந்திரனுன சிங்கம் கம்பீரமான குரலில் இப்படிச் சொல்லி, அங்கிருந்த காவலாட்களை அதிகார தோரணையில் சைகை காட்டிற்று. அடுத்த நிமிடம் ஒரு மனிதன் நாலைந்து ஓநாய்களால் காவல் காக்கப்பட்டு, மிருகேந்திரன் முன்னுல் கொண்டு வந்து நிறுத்தப் பட்டான்.

அவனுடைய நமஸ்காரத்தை ஒரு இலேசான புன்னகையினுல் பெற்றுக் கொண்ட சிங்கம் அவன் கட்சியைச் சொல்லும்படி கேட்டது.

அவன் ஆரம்பித்தான்:

"மிருகங்களுக்கெல்லாம் ராஜாதி ராஜனே! உலகிலுள்ள ஜீவன்களிலெல்லாம் மிக மிகக் கேவலமான ஜன்மத்தை நான் எடுத்து விட்டேன். என்னை நாகரீக மனிதனென்று சொல்லுவார்கள். ஆனுல் அந்த நாகரீகப் பேய் எப்படி வந்தது?—....................சுதந்திரத்துடனிருந்த நான் இயற்கையன்னையின் தயவை வெறுத்து, பளபளப்பான செயற்கைச் சுடரில் அறியாமல் போய் விழுந்தேன்......அதிகமேன்? உதாரணம் வேண்டுமென்றுல் என் வீட்டைத்தான் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்களேன். நான் குடியிருக்கும் வீடு என்ற கூட்டில் ஒரு க்ஷணமும் நீங்களிருக்கச் சம்மதிக்கவே மாட்டீர்கள். குதிரை லாயம், என் ஜெயில் கூட அதைவிட நல்லது ...."

"ஜெயில்! அப்படி என்ருல் என்ன?" என்று மிருகேந்திரன் குறுக்கிட்டான்.

"ஜெயில் என்பது ஒரு பெரிய கட்டிடம். சுத்தமாக வைத்திருப்பார்கள். அங்குள்ள மனிதர்களுக்கு இலவசச் சாப்பாடு உண்டு. தனித்தனி அறையுண்டு. யார் யார் சட்டத்திற்கு உட்படவில்லையோ, அவர்களை யெல்லாம் அங்குதான் அடைப்பார்கள்..."

"சட்டம் என்ருல் என்ன?"

"சட்டம் என்ருல் நீதி ஸ்தலங்களில் உபயோகப்படும் ஒரு பதம், தற்போதுள்ள ஜன சமூகத்தை ஒரு கட்டுப்பாடாக எப்பொழுதும் வைத்திருக்க சில திட்டங்களைப் போட்டிருக்கின்ருர்கள். அவைகளைத் தான் சட்டங்களென்று மனித வர்க்கத்தைச் சேர்ந்த நாங்கள் சொல்லுகிருேம்."

"ஓ! அப்படியா? நீ அந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலையடைய விரும்புகிருய் போலும்!" என்று வியப்புடன் மிருகேந்திரன் கேட்டான்.

"ஆம்! அதுதான் என்னாசை, விடுதலை, சுயேச்சை, சுதந்திரம்— இவைகள் தான் என் லட்சியங்கள்"

"அப்படி என்றால் இப்பொழுது மனிதர்கள் சுதந்திர வாழ்க்கையிலில்லையா?"

"இல்லை......ஆனால் அவர்கள் மனதில் வெகு சுயேச்சையுடனிருப்பதாகத்தான் எண்ணம். மனித சமூகத்தில் துளி சுதந்திர வாழ்வுமில்லை."

"நீ சுதந்திரத்தை விரும்புகின்றாய்.........சரி.........ஆனால் மற்ற ஜந்துக்களிடமும் ஆசை இருக்குமல்லவா? அப்படி இருக்க மிருகங்களை எல்லாம் கொலை செய்து அவைகளின் சுதந்திரத்தை அபகரிப்பதன் நோக்கமென்ன?"

"மகாராஜா! சொல்லுவதை நான் வெட்கத்துடனும், வருத்தத்துடனும், ஒப்புக் கொள்ள வேண்டி இருக்கிறது. ஆனால் சமீபத்தில் நடந்த சர்வதேசப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இனிமேல் காடுகளை அழிக்கலாகாதென்றும், மிருகங்களை எல்லாம் அப்படியே காப்பாற்ற வேண்டுமென்றும் முடிவு செய்தார்கள்......"

மூலையிலிருந்த பாம்பொன்று, "இம் மனிசப்தரின் நய வஞ்சகத்தை ஒருபொழுதும் நம்பலாகாது" என்று தனக்குள்ளேயே சீறிற்று.

மனிதன் மீண்டும் தொடர்ந்தான்: "மிருகங்களைக் கொல்வதிருக்கட்டும். மனிதனை மனிதன் கொல்வதில்லை என்ற சத்தியத்தை எல்லோரிடமும் வாங்கிக் கொள்ள ஜினிவா என்ற இடத்தில் ஒரு மகாநாடு நடந்தது. இதில் எல்லா தேசப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். ஆனால் அந்தத் தீர்மானம் தோற்றுப் போய் விட்டது. கூட்டங் கூட்டமாக மனிதர்கள் கொல்லப்படுகிறார்கள்"

"கூட்டங் கூட்டமாகக் கொன்றால் அது கொலைக் குற்றமல்லவா?"

மிருகேந்திரனின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"கூட்டங் கூட்டமாகக் கொன்று குவிப்பதற்கு யுத்தமென்று பெயர். அது சட்ட ரீதியாக 'நியாய'மானது. சென்ற மகா யுத்தத்தில், உங்கள் எதிரே நிற்கும் நான்கூட அநேகரைக் கொன்று குவித்தேன். அதற்காக மெடல்களும் பரிசுகளும் என்னிடம் வந்து குவிந்தன. நானும் விசேஷ சமயங்களில் அந்தக் கொலைச் சின்னங்களை அணிந்து கொண்டு மினுக்குவதுமுண்டு. இன்னொரு மெடலும் என்னிடமிருக்கின்றது. ஒரு காலத்தில் வெள்ளத்தில் அகப்பட்டுத் தவித்த அநேகரை நான் காப்பாற்றினேன். அதற்காக அளிக்கப்பட்ட பதக்கம் அது. **கொலை செய்ததற்கும் பரிசு; தப்புவித்ததற்கும் பரிசு! இதுதான் மனித வர்க்கத்தின் நாகரீகம்! நாகரீக மேனா மினுக்கு!**......இந்த அநியாயத்தை எல்லாம் கண்டும் கேட்டும், என் பார்க்கும் சக்தியையும், கேட்கும் சக்தியையும் பாழாக்கி விட்டேன். இனிமேலாவது எஞ்சிய வாழ்நாளை இந்தக் காட்டில் சுயேச்சையாகக் கழிக்கலாமென்று மகாராஜாவிடம் விண்ணப்பம் செய்தேன்."

அந்த மனிதன் மறுபடியும் தலை குனிந்து வணங்கினான்.

ஒரு கிழக் குரங்கிற்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. திடீரென்று அது சபையினிடையே மரத்திலிருந்து குதித்துப் படபடப்புடன் பேசிற்று. பேசப் பேச அதன் குரல் வெகு உச்சஸ்தாயிக்குப் போய் விட்டது.

"அடே பயலே! எங்கள் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! எப் ஜாதியின் மூளையைத் திருடிக்

கொண்டு ஓடிவிட்ட துரோகிகளின வம்சத்தினனல்லவா நீ! அந்த இரத்த வெறி பிடித்த மனித ஜாதிக்கே ஓடிப் போய்விடு. பகை, யுத்தம், தில்லு முல்லு, பேத்துமாத்து—இவை கள்தான் உன் தலை எழுத்து. அந்த ஒட்டைக் கூடுதான் உனக்கு லாயக்கு. அர்த்தமில்லாமல் வஞ்சக இதயத்துடன் கூடிக் கூடிப் பேசி உங்கள் பேராசைகளை எல்லாம் மறைத்து வைத்திருக்கின்றீர்களல்லவா? எப்பொழுது திரும்புவான் தலையில் கல்லைத்தூக்கிப் போடலாம் என்ற துரோகச் சிந்தனைதானே எப்பொழுதும்?......சரி, சரி உன் ஜாதிதான் உனக்குச் சரி. பணக்காரன்—ஏழை உங்கள் ஜாதியிலேயே! ஒருவனைத் தாழ்த்தி வைக்க...தூ! உங்களுக்கு மனச்சாட்சி இல்லை...... 'நியாயம்' என்ற கற்பனைப் பிசாசிடம்தானே போகின்றீர்கள்...தலைவிதி!......அதிருக்கட்டும். மனைவிமார்களைவிட உங்களுக்கு உயர்ந்த சொத்து எது? அப்படி இருக்க அவளைப் பலவீனத்தால் தவிக்கவிட்டு—சிசு மரணத்தை அபரிமிதமாக்கி—துப்பாக்கி வாங்கவும், பீரங்கி வாங்கவும் காசை வாரி இறைக்கின்றீர்களே! இதைக் கேவலம் என்று ஒரு விநாடியாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?... காசு என்ற உலோக வில்லைக்குத்தானே உங்கள் ராஜ்யத்தில் மதிப்பு...... வேண்டாம், வேண்டாம். வஞ்சகம் துரோகம் நிறைந்த ஒருவன் நம் கூட்டத்தில் வேண்டாம். நீ உன்கூட்டத்திற்கே ஒழிந்து போய்விடு......"

அந்தக் குரங்கின் கண்களில் வருஷக்கணக்காக இருந்த அத்தனை ஆத்திர உணர்ச்சியும் பொங்கி வழிந்தது.

மிருகேந்திரனை நோக்கிக் குரங்கு தொடர்ந்து பேச ஆரம்பித்தது :

"ராஜாதிராஜனே! தாங்களே வலைகளைப்போட்டுத் தாங்களே மாட்டிக் கொள்ளும் ஜந்துவில் ஒருவன் நம்மிடம் வேண்டாம். ஆபாசங்கள், அக்கிரமங்கள், அநியாயங்கள் நிறைந்த நாகரீகம் என்ற பகட்டுப் போர்வை நம்மிடமும் பரவ விட வேண்டாம்" என்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டது.

"என்ன! மனிதன் மிருகங்களை விடக் கேவலமாகவா போய்விட்டான்? அவன் சகவாஸ தோஷம் அவைகளைக் கெடுத்தும் விடுமாமே" என்ற முணுமுணுப்புகள் மிகவும் கஷ்டத்துடன் அவன் உதட்டிலசைந்தன.

*　　*　　*

பூம்ம்!.............பூம்ம்ம்!!......
காலை ஐந்து மணி சங்கை ஊதினார்கள்.

அவன் திடுக்கிட்டுத் தன் கனவிலிருந்து விழித்தான். அவன் உள்ளம் சஞ்சலத்தில் குமுறிப் பொங்கிக் கொண்டிருந்தது.

"நாய் நன்றியுள்ளது; கழுதை பொறுமையுள்ளது; குதிரை தன் எஜமானனை மனதார நேசிப்பது; யானை பெருந்தன்மை யுடையது; சிங்கம் கம்பீரமிருந்தது; கேவலம் குரங்குகூட தன் மனைவி மக்களுடன் வாஞ்சையுள்ளது; ஆடு சேர்ந்து வாழ்வது, மான் கபடமற்றது; பசு சாந்தம் மிருந்தது........ ஹூம்! மிருகங்களுக் கிருக்கும் இந்த குணங்களில் ஒன்றுவது மனிதனிடமிருக்கின்றதா? அவைகள் இவனை 'மானிடப் பதர்' என்று விலக்கியதில் ஒன்றும் வியப்பில்லை........" என்று தன்னுள்ளே சொல்லிக்கொண்டான்.

GENTS LEVER WRIST WATCHES

Reduced Sale Price Rs. 4-12-0

ரோல்ட்கோல்டு ரிஸ்ட்வாட்சு நெ.52 ரூ. 4—12—0



படத்தில் காண்பதுபோல் மிகவும் அழகான கைக்கெடியாரங்கள் உயர்ந்த ஸ்விஸ் மேக்கர் லீவர் மூமெண்ட் உள்ளது. உறுதியான சாமான்களால் தயார் செய்யப்பட்டது. சரியான மணியைக் காட்டும். இந்த லீவர் கெடியாரம் வாங்கினால் என்றும் ரிப்பேர் கவலையில்லாமல் இருக்கும். பார்வைக்கு அசல் தங்கக் கெடியாரம் போல் கையில் கட்டிக்கொள்வோருக்கு வெகு அழகுள்ளது. இதில் காட்டியபடி எந்த மாதிரி (Round, Square, Rectangular shapes) கெடியாரங்கள் வேண்டுமானாலும் அனுப்பப்படும். குறைந்த விலை ரூ. **4—12—0** 3 வருஷம் கியாரெண்ட். சீக்கிரம் முந்துங்கள். குரோமியம் கேஸ் (Chromium Case) ரிஸ்ட்வாட்சு ரூ. **5—0—0.**

வெஸ்ட்ரன் ஸ்விஸ் வாட்ச் கம்பெனி,
போஸ்ட் பாக்ஸ் நெ. **68,** ஜி. டி. மதருஸ்.

WESTERN SWISS WATCH Co.,
Direct Importers, Post Box No. 68, G. T. MADRAS.

இருமலை இன்றே ஒழி!

எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படுவது

துரும்பிலேயே கிள்ளி எறிந்தால் இந்தத் துன்பமேன்!
ஆனாலும் பரவாயில்லை.

சி. எம். சாமி # தாளக பஸ்பம்

இருமல், இளைப்பு, இழுப்பு, ஈளை, கபம், காசம், குரலடைப்பு, தொண்டைக்கம்மல், தொண்டைவலி, மார்துடிப்பு, க்ஷயம் முதலிய கொடிய வியாதிகளையும் குணப்படுத்துகிறது. மார்பிலும் தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலை நாளாவட்டத்தில் தணியச் செய்து, கபத்தை அறவே ஒழித்து சளியோடு ரத்தம் வருதல் மஞ்சள் நிறமாக வருதல், கோழை கட்டி கட்டியாய் விழுதல், நடந்தால் இளைப்புக் காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்துகிறது.

புட்டி 1-க்கு விலை ரூ. **4—0—0.** தபால் சார்ஜ் வேறு.

தலைமைஆபீஸ்:மலையப்பசாமி வைத்தியசாலை, பழனிS.I.

பிராஞ்சு:-(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
,, (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

மறு சந்திப்பு

(வி. ச. சே.)

ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மாங்தொறை சுமார் மூன்று மைல்கள் இருக்கும். ரெயிலிலிருந்து இறங்கியதுமே பசுபதி, ஆகாயம் மப்பாயிருப்பதைக் கவனித்தான். கருமேகங்கள் ஒன்ருய்ச் சேர்ந்து ஆகாயத்தை மெதுவாக சூழ்ந்துகொண்டே யிருந்தன. ஆனல் மூன்று மைல் செல்வதற்குள் அவ்வளவு பெரு மழை வந்துவிடும் என்று அவன் நினைக்கவில்லை. குறிப்பிட்ட நாளில் நிச்சயமாக வருவதாக அவன் தெரிவிக்கவில்லை யாகையால் அவனுடைய மாமனரிடமிருந்து வண்டி ஒன்றும் வரவில்லை. மூன்று மைல் தானே என்று கருதி, பசுபதி மாங்தொறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் தான் நடந்திருப்பான். பெரு மழை பிடித்துக் கொண்டுவிட்டது. ஆகாயம் நன்ருக இருட்டி விட்டது. அதுவும் மாலை வேளை கேட்கவேண்டுமா இருட்டை!

மழை 'சொய்' என்று பெய்து கொண்டிருந்தது. 'உஸ், உஸ்' என்று பிசாசுக் காற்றின் இரைச்சல் பயங்கரமா யிருந்தது. 'கட, புடா' என்ற இடியின் சப்தம் காதைப் பிளந்து கொண்டிருந்தது. கண்களைப் பறிப்பதைப் போல மின்னும் மின்னல் 'பளிச், பளிச்' என்று மின்னிக் கொண்டிருந்தது. அந்த மின்னல்களின் வெளிச்சத்தைக் கொண்டு சரியான பாதையில் நடந்து கொண்டு சென்ருன் பசுபதி.

அப்பொழுது பளிச் சென்று ஒரு மின்னல் மின்னிற்று. அதன் வெளிச்சத்தில் அவன் ஒரு குடிசையைக் கண்டான். அக் குடிசையின் அருகில் வந்து நின்று, கதவைத் தொட்டது தான் தாமதம் அது தானகவே திறந்து கொண்டது. உள்ளிருந்து 'ஹூம், ஹூம்' என்று மெதுவான சப்தம் மாத்திரம் வந்துகொண்டிருந்தது. ஒரு விளக்கும் இல்லை. தன் பெட்டியை அப்படியே கீழே வைத்துவிட்டு 'ஐயா, ஐயா' என்று கத்தினன். 'ஹூம், உம்' என்ற சப்தத்தைத் தவிர வேறு ஒரு பதிலும் இல்லை. யாரோ நோயால் வருந்துகிருப் போல் தோன்றுகிறது என்று நினைத்து பசுபதி தன் டார்ச் லைட்டை ஏற்றினன்.

அங்கே ஒரு கயிற்றுக் கட்டிலில் ஒரு பெண்மணி படுத்து நோயால் வருந்திக் கொண்டிருந்தாள். முதலில் அவள் இன்னரென்று பசுபதிக்குத் தெரியவில்லை. அவள் அவ்வளவு உரு மாறிப் போயிருந்தாள். ஆனல் அவள் முகத்தைப் பார்த்ததும் எப்பொழுதோ எங்கேயோ பார்த்தது போலிருந்தது பசுபதிக்கு. சிறிது யோசித்த பிறகு அவனுக்கு ராதாவின் ஞாபகம் வந்தது. மறுபடியும் அப் பெண்மணியின் முகத்தைப் பார்த்தான். 'ஆம், இவள் அதே ராதா தான்' என்று பசுபதியின் இருதயம் சொல்லிற்று.

பசுபதியின் தலை சுழல ஆரம்பித்தது. தான் ராதாவைக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்ததை ஒரு கிழவன் கெடுத்து விட்டான். இப்பொழுது ராதா இக் குடிசையில் எப்படி வந்தாள்? ஒரு வேளை யாருடைய வஞ்சகச் செயலாகவாவது இருக்கலாம், என்று நினைத்தான்.

'ராதா' என்று பசுபதி கூவினன்.

தன்னைப்பேர் சொல்லி அழைப்பவர் இனிமேல் இவ்வுலகில் ஒருவரும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்த ராதா திடுக்கிட்டாள். அப்பொழுது தான் யாரோ தன் குடிசையில் நுழைந்திருக்கிறார் என்று நினைத்துத் திரும்பிப் பார்த்தாள்.

பசுபதி இப்பொழுது கட்டிலின் மேலேயே உட்கார்ந்துகொண்டு விட்டான். ராதா பசுபதியைப் பார்த்தாள். பசுபதி ராதாவைப் பார்த்தான். இருவருடைய இருதயங்களும் வேகமாக அடித்துக் கொண்டிருந்தன.

“முதலில் இவள் என் காதலியாக இருந்தாள். பிறகு ஒருவனுக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட்டாள். இப்பொழுது இக் குடிசையில் இருக்கிறாள். இவளிடம் என்னவிதமாகப் பேசுவது?'' என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்.

“என் பழங் காதலனிடம் விதவையாகிய நான் எப்படிப் பேசுவது?” என்று ராதா நினைத்து ஒன்றும் தோன்றாமல் அல்லல் பட்டுச் கொண்டிருந்தாள்.

பிறகு பசுபதியே முதலில் பேச்சை ஆரம்பித்தான். ராதாவின் ஜீவியத்தில் தனக்கு இவ்வளவு நாள் தெரியாத சம்பவங்கள் பசுபதிக்கு மிகவும் வேதனையைத் தந்தது. எல்லாவற்றையும் சொன்ன ராதா தன் கணவரின் பெயரை மட்டிலும் கூறவில்லை. அதைக் கேட்டால் ராதா துக்கப் படுவாள் என்று நினைத்து பசுபதியும் அதைப் பற்றிப் பேசவில்லை.

‘ராதாவின் கணவர் காலஞ்சென்று விட்டார். அவர் பங்காளி ஒருவன் ராதாவின்மீது வழக்குப் போட்டு அவளது சொத்துக்கள் அனைத்தையும் கவர்ந்து கொண்டான். அதன் மீது அவள் பெரிய நீதி ஸ்தலத்தில் விண்ணப்பம் செய்தாள். அங்கும் அவளுக்குப் பாதகமாக முடிந்தது. அந்த முடிவு ஏற்பட்ட பின்னர் பங்காளி அவளது வீடு முதலியவற்றை யெல்லாம் தன் வசப் படுத்திக் கொண்டு அவளை வீட்டை விட்டுத் துரத்திவிட்டான். அவளுடைய செல்வம் முழுமையும் ஐந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ளது. எல்லாம் போய்விட்டது. ராதா தன் கையிலிருந்த சிறு பொருளை வழக்கிலே செலவழித்து விட்டாள். இனி கையில் ஒரு காசும் இல்லை. சோற்றுக்கே திண்டாட்டம் ஏற்பட்டது. நாயகன் இல்லாதவள் என்ன செய்வாள்? ஒரு குடிசை கட்டிக் கொண்டு கையால் உழைத்துக் கிடைத்ததைக் கொண்டு காலங் கழித்துவந்தாள். இப்பொழுது இரண்டு நாட்களாகக்காய்ச்சல் கண்டிருக்கிறது. கவனிப்பார் யாரும் இல்லை. ஏதோ குடிசையில் சிறிது மீதி இருந்த ஆகாரமும் நேற்றோடு தீர்ந்து விட்டது. இன்று காலையிலிருந்து பட்டினி. வீட்டில் விளக்கு ஏற்றுவதற்குக் கூட எண்ணெய் கிடையாது. இவைகளே ராதாவின் அரை குறையான வார்த்தைகளால் பசுபதி அறிந்து கொண்டது.

தான் கொண்டுவந்த பழங்களை ராதாவுக்குக் கொடுத்தான். அவளும் அவற்றில் சிலவற்றை சாப்பிட்டாள். பிறகு அக் குடிசையிலேயே அவன் இன்னொரு மூலையில் படுத்துக் கொண்டான்.

அவனுக்குத் தூக்கம் எப்படி வரும்? எதை எதையோ பற்றி என்ன என்னவோ யோசித்துக் கொண்டிருந்தான். இனிமேல் ராதாவைத் தன்னுடனேயே வைத்துக் கொள்வது என்றும் தீர்மானித்தான்.

ராதாவுக்கும் அழுகை அழுகையாக வந்தது. துக்கம் அவள் மனதில் குடிகொண்டிருந்தது.

* * *

பசுபதியும் ராதாவும் பரஸ்பரம் காதலித்து வந்தார்கள். அப்பொழுது

ராதாவுக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்று அவளுடைய பெற்றோர்கள் துரிசப் படுத்தினர்கள். பெண்ணிற்கு வயதாகிவிட்டது என்று அவர்கள் மிகவும் கவலைப் பட்டார்கள்.

பசுபதியின் தகப்பனரோ அப்பொழுது அவனுக்குக் கலியாணம் செய்ய முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

பிறகு ராதா ஒரு பணக்காரருக்கு இரண்டாம் தாரமாக கட்டிக் கொடுக்கப்பட்டாள். பிறகுதான் கிழவன் இறந்து, முன் சொல்லிய கஷ்டங்கள் ஏற்பட்டு ராதா ஒரு குடிசையில் வசிக்கும் நிலைமைக்கு வந்தாள்.

* * *

பசுபதியின் படிப்பு முடிய ஒரு வருடம் ஆயிற்று. பிறகு அவனுக்கு வேலையும் கிடைத்து விட்டது. சதாசிவ அய்யரின் சுமாரியான கோமளத்திற்குத் தாலி கட்டினன்.

கோமளம் க்ஷயரோகத்தினல் வருந்திக் கொண்டிருந்தாள். ஆகையால் அவளை மணக்க ஒருவரும் முன் வரவில்லை. சதாசிவ அய்யர் பசுபதியின் தந்தையிடம் வந்து நிறைய வரதட்சிணையைக் கொடுத்து தன் மகளின் கலியாணத்தைச் செய்தார். கலியாண சமயத்தில் பெண்ணுக்கு ஒரு வாரமாக உடம்பு சரிப்படவில்லையென்றும் அசனல்தான் அசக்தியாகக் காணப் படுவதுமன்றி சிறிது இருமுகிறாள் என்றும் சொல்லி ஏமாற்றி விட்டார்கள்.

கலியாணம் நடந்து ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டது. இதற்கு மத்தியில் பசுபதியின் தந்தை சிவலோகப் பிராப்தியடைந்து விட்டார். ஒரு வருஷத்திற்குப் பிறகு பசுபதி பொறுமையை இழந்தவனுய், தன் மனைவியைத் தன்னிடம அனுப்பி வைக்கும்படி கடிதம் எழுதினன். "உன் மனைவி கவலைக்கிடமாய் இருக்கிறாள். நீயே நேரில் வரவும்" என்ற பதில் தான் அவன் எழுதிய கடிதத்திற்கு வந்தது.

சதாசிவய்யர் எவ்வளவோ ஊர்களுக்குச் சென்று தன் மகளின் வியாதியைப் போக்க எவ்வளவோ பொருள் செலவழித்து பிரயத்னப் பட்டார். எல்லாம் வீணுயிற்று. பிறகு கடவுள் விட்ட வழி விடட்டுமென்று நினைத்து தன் கிராமமாகிய மாந்தொறைக்கே வந்து அங்கு இருக்கும் நாட்டு வைத்தியனிடமே வைத்தியம் செய்து வந்தார். "எப்படியோ கலியாணம் நடந்து விட்டது. பிழைத்து இருந்தால் அதனுடைய அதிர்ஷ்டம்; செத்தால் துரதிர்ஷ்டம். நாம் என்ன செய்யலாம். மனிதப் பிரயத்னம் செய்தாய் விட்டது. இனிமேல் தெய்வத்தின் சித்தம்" என்று சதாசிவய்யர் அடிக்கடி சொல்லுவார்.

நிற்க, கடிதம் வந்ததும் பசுபதி மாந்தொறைக்குப் பிரயாணமானுன்—வழியில் தான் கதையின் தொடக்கத்தில் சொல்லப்பட்ட எதிர்பாராச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

* * *

காலையில் ஆகாயம் நிர்மலமாய்விட்டது. மழை என்னவோ நின்றுவிட்டது. ஆனல் விருட்சங்கள் இன்னமும் தண்ணீரைத் தெளித்துக் கொண்டிருந்தன. புள்ளினங்கள் சூரியனுக்கு வரவேற்புக் கீதம் பாடின.

ராதாவும் பசுபதியும் விழித்துக் கொண்டார்கள். பட்டினி பரம ஒளஷதமல்லவா? இரண்டு நாள் பட்டினி ராதாவின் காய்ச்சலை சிறிது குறைத்தது.

"இப்பொழுது நான் என் மாமனரின் வீட்டிற்குச் செல்லவேண்டும். உன்னையும் என்னேடு அழைத்துக் கொண்டு போகிறேன்" என்று பசுபதி சொன்னன்.

"ஐயோ, வேண்டாம். நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் சென்று வாருங்கள்! மேலும் நான் உம்முடன் வந்தால் அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?" என்றாள் ராதா.

"நினைத்துக் கொள்ள என்ன இருக்கிறது? நீ என் தங்கை யென்றும் என் கலியாணத்திற்கு உன்னால் வரமுடியவில்லை என்றும் சொல்லிக் கொள்கிறேன். மேலும் உன்னால் யாருக்கு என்ன வருத்தம் இருக்கக் கூடும்? உனக்கும் இதனால் ஒரு கஷ்டமும் இல்லை. உனக்குக் கலியாணமாகி அமங்கலியாகவும் ஆய்விட்டாய். எனக்கும் கலியாணம் நடந்துவிட்டது. இது நாம் அறிந்த விஷயமே. அதனால் அங்கு சென்றால் எனக்காவது உனக்காவது அதிகமாக ஒரு துயரமும் நேராது என்பது எனது அபிப்பிராயம். நீ இக் குடிசையிலிருந்து கஷ்டப்படுவதற்குப் பதில், என் குடும்பத்தில் ஒருவளாக இருக்கப் போகிறாய். அவ்வளவு தான்" என்று பசுபதி பலவாறாகக் கூறி ராதாவைத் தன்னுடன் வரும்படி இணங்கச் செய்தான்.

ராதாவும் பசுபதியும் காலை ஒன்பது மணிக்குள் மாங்தோறையில் இருக்கும் சதாசிவய்யரின் இல்லத்திற்குச் சென்றார்கள். '........கவலைக் கிடமாயிருக்கிறது......' என்று பசுபதிக்கு வந்த கடிதத்தில் வரைந்திருந்தது உண்மையாகவே எல்லோரையும் கவலையிலாழ்த்திவிட்டது. தான் ஒரு பாபாத்மா என்று நினைத்திருந்த ராதாவுக்கு தன் காதலனை மணந்த கோமளமும் ஒரு பாபி தான், என்று தோன்றியது. தான் மேலாகப் பாவிக்கும் பசுபதியை அடைந்தும், அவனுடன் கூடி வாழ கோமளம் கொடுத்து வைக்காமல் விண்ணுலகத்திற்குச் சென்றது அவளுக்கு அளவில்லாத துக்கத்தைக் கொடுத்தது. பசுபதியும் வருந்தினான். எவ்வளவ பேர் எவ்வளவு வருந்தியும் என்ன? நடந்தது நடந்து விட்டது.

பசுபதி பிறகு ராதாவைக் கூட்டிக் கொண்டு தன் ஊருக்குச் சென்றான். முன்னமேயே பிரேமையினால் சேர்க்கப்பட்ட அவர்கள் இப்பொழுது இன்னும் நெருக்கமாக காதல் கயிற்றால் இணைக்கப் பட்டார்கள்.

ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முகன் யந்திரம்
12,58,400 ஜனங்கள் போற்றுவது
ஆறு வருடம் பலன் தரும்.

ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு துற் சொற்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும் சத்துரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரி புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரிகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதகவலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை பாலரிஷ்டம், பக்ஷி தோஷம் முதலிய 4448 தோஷங்கள் தீரும். ரூ. 2.

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (c)
வாலாஜாபாத் P. O. S. I. R. சென்னை.

சொன்னதும் செய்ததும்

எம். ஆர். என்.

மணி ஐயர் ரொம்ப மெலிந்து காணப்பட்டார். ஒற்றைநாடிச் சரீரம். எங்கே ஒடிந்து விழுந்து விடுமோ வென்று பயப்பட வேண்டி யிருந்தது. நின்ருல் நிற்க முடிவதில்லை. உட்காரந்தால் உட்கார முடிவதில்லை.

அவரைப் பார்க்கும்போதெல்லாம் அவருடைய ஆப்த நண்பர்கள் தங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்காமலிருக்கமாட்டார்கள்.

டிராமில் போய்க் கொண்டிருந்த போது அவருக்கு அறிமுகமாகாத மனிதர் கூட அவரை விசாரித்தார்.

"என் ஸார், ஆபீஸில் ரொம்ப வேலையோ? துரும்பாய் இளைத்துப் போயிருக்கிறீர்களே" என்ருர் அம்மனிதர்.

அதற்கு முன் பார்த்திருப்பதைப் போல அவர் பேசினர்.

"வேலைக்குக் குறைச்சலில்லை. இருந்தாலும் நம்ப தேக வாசியே அப்படி. எந்த மருந்து சாப்பிட்டும் பிரயோஜனமில்லை." என்ருர் மணி ஐயர்.

"அப்படி ஒரேயடியாகச் சொல்லி விடாதீர்கள். எல்லா மருந்துகளும் அப்படி இருக்காது. சிலவற்றில் குணம் இருக்காமல் போகாது."

"யாரைக் கேட்டாலும் ஏதாவது ஒரு மருந்தைச் சொல்லி வைக்கிருர்கள். பணம் செலவழிவதுதான் மிச்சம்."

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நீங்கள் 'தேக புஷ்டி லேகிய'த்தைப் பற்றிக் கேள்விப் பட்டதில்லையோ?"

"அவ்வளவாகக் கேள்விப்படவில்லை. என்?"

"அதைச் சாப்பிட்டுப் பாருங்கள் சார். என் நண்பரொருவர் உங்களை விட மோசமான நிலையிலிருந்தார்..."

"நீங்கள் என் விஷயத்தில் ரொம்ப அக்கறை காட்டுகிறீர்களே. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அதை வாங்கிப் பரிக்ஷை செய்து பார்க்க வேண்டுமென்று தோன்றுகிறது, பார்ப்போம்"

"நீங்கள் கடைக்குப் போக வேண்டிய சிரமம் கூட எடுத்துக் கொள்ள வேண்டாம். இதோ பாருங்கள்" என்று அம்மனிதர் ஒரு புட்டியை எடுத்து நீட்டி எட்டணு வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தார்.

அம்மனிதர் தமது விஷயத்தில் அவ்வளவு அக்கரை காட்டியதின் தாத்பரியம் மணி ஐயருக்கு அப்போது விளங்கிற்று!

அந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்த பிறகும் முன் போலவே காணப்பட்டார்.

"அந்த ஆசாமிக்கு நான் முன் ஜன்மத்தில் கடன் பட்டிருக்கிறேன். அது தான் வாங்கிக்கொண்டு போய்ச் சேர்ந்தான்." என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்தார்.

ஆனுல் நெடு நாள் பேசாமல் இருக்கவில்லை. அம்மாதிரியே என்றும் இருந்தால் வெகு நாள் காலத்தை ஓட்ட முடியாது என்பதை மணி ஐயரே தெரிந்துகொண்டார்.

தட்சணமே ஒரு டாக்டரைப் பேட்டி கண்டார். மருந்து கொடுத்தாக வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

டாக்டர் அவருடைய இருதயத்தைத் தொட்டுப் பார்த்தார். கண்களைத் திறக்கச் சொல்லிப் பார்த்தார்

பரீக்ஷை நடைபெற்ற பிறகு தலையைச் சொறிந்து கொண்டார் டாக்டர்.

"இந்தாருங்கள் இந்த புட்டி மாத்திரையை எடுத்துக்கொண்டு போங்கள். தினம் கால்படி சுயம் பசுவின் பாலில் கலந்து அம்மாதிரி மூன்றுவேளை சாப்பிட்டு வாருங்கள்" என்று சொல்லி கவனமாகப் பணத்தை வாங்கிக் கொண்டு அனுப்பினார்.

ஒரு பசுமாட்டை விலைக்கு வாங்கி, டாக்டர் சொன்னபடி செய்து வந்தார் மணி ஐயர்.

ஒரு மாதத்திற்குள் எவ்வளவு மாறுதல்! உடம்பு மிகவும் தேறிவிட்டது. ஆளே உரு மாறி யிருந்தார். அவராலேயே அதை நம்ப முடியவில்லை.

அவரைப் பார்த்து நண்பர்கள் ஆச்சர்யம் அடைந்து போனார்கள்.

"என்ன ஐயர்வாள்! ஆளே அடையாளமே தெரியவில்லையே!"

யார் பார்த்தாலும் அம்மாதிரி கேட்டுக் குசலப்ரச்னம் செய்யத் தவறியதில்லை.

டாக்டரைப் பார்க்கப் போனார்.

"வாருங்கள் இப்பொழுது குணமாகிவிட்டது போலிருக்கே" என்றார் டாக்டர்.

"இப்பொழுது உட்கார்ந்தால் உட்கார முடிகிறது......"

"நான் கொடுத்த மாத்திரைகள் சரியாக வேலை செய்து விட்டன. பார்த்தீர்களா?" டாக்டருக்கு அளவில்லாத பெருமை.

"முன்னே 90 பவுண்டு இருந்தேன். இப்பொழுது 190 பவுண்டு இருக்கிறேன்."

"எல்லாம் மாத்திரைகள் செய்த வேலை!"

"நீங்கள் சொன்னபடியே பாலைச் சாப்பிட்டுக் கொண்டு வந்தேன்."

"நம்ப கைராசி ஸார்!

"ஆனால் ஒன்று செய்ய மறந்துவிட்டேன்."

"என்ன?"

"நீங்கள் கொடுத்த மாத்திரைகளைப் பாலில் கலந்து சாப்பிட மறந்து போய் விட்டேன்." என்றார் மணி ஐயர்.

ரூ. 3—4—0க்கு

450 அழகிய வெகுமதி சாமான்கள்.



சரியான நேரம் காட்டுவதும், 5 வருடம் உத்திரவாதமுள்ளதுமான நமது அழகிய பாக்கெட் கடிகாரம் ரூ. 3—4—0. ஷை கண்ட கடிகாரம் வாங்குகிறவர்களுக்கு, ஒரு அழகிய தங்க கில்டுள்ள டம்மி கைக் கடிகாரமொன்றும், 200 அடி வெளிச்சம் காட்டும் டார்ச் லைட் ஒன்றும், 14 Ct. ரோல்டு கோல்டு நிப்புள்ள ஒரு பவுண்டன் பேனாவும், ஒரு டம்மி டைம்பீசும், பிரஷ் சோப்புடன் கூடிய சேப்டி ரேசரும், 4 தங்கக் கில்டு பொத்தான்களும், இன்னும் அழகிய 440 சாமான்களும் அளிக்கப்படும்.

பாக்கிங் & போஸ்ட்டேஜூக்காக அணா 12 தனி.

ORIENTAL FANCY STORES,

Post Box No. 12204, Calcutta. (Sec 153

அருணாசலக் கவிராயர்

டி. வி. ஸ்ரீநிவாஸாச்சார்

கச்சேரிகளில் பாடுவதற்கு தெலுங்கிலிருப்பது போல், பெரிய கீர்த்தனங்களாகத் தமிழில் இல்லையே என்பதாக கொஞ்ச நாட்களுக்கு முன்பு நம் நாட்டு வித்வான்களிடையே ஒரு பெரிய மனக்குறை இருந்து வந்தது. இதற்குக் காரணம், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளையும், அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனைகளையும், கனம் கிருஷ்ணய்யர், கவி குஞ்சரபாரதி, சுப்பராமய்யர், முத்துத் தாண்டவர் முதலியவர்களுடைய கீர்த்தனங்களையும், பதங்களையும், அவர்கள் மறந்து விட்டது தான். ஆனால் இந்த மனக் குறை இப்போது நீங்கியிருக்கிறது. ஸாஹித்ய விசேஷத்திலும், கீர்த்தனை அமைப்பிலும், பாவ நிறைவிலும், மேற் சொன்னவர்களின் பாடல்கள், எந்தத் தெலுங்குப் பாடலுக்கும், கொஞ்சமும் குறைந்தவையல்ல என்பது இப்போது எப்படியோ தெரிந்து விட்டது. "சிவலோக நாதனைக் கண்டு" "எனக்கு னிருபதம்" முதலிய பாடல்கள் இப்போதும் எங்கும் கேட்கிறோமல்லவா?

தமிழில் எல்லோரும் பாடி இன்புறக் கூடிய எளிய நடையில், பல உயர்ந்த கீர்த்தனங்களைப் பாடித் தந்தவர்களில் "அருணாசலக்கவிராயர்" மிகவும் முக்கியமானவர். இவர் தஞ்சை ஜில்லாவில், "தில்லையாடி" என்ற திவ்யக்ஷேத்திரத்தில் வேளாளப் பூவைசிய மரபில், நல்ல தம்பிப்பிள்ளை என்பவருக்கும், வள்ளியம்மை என்பவருக்கும், நான்காவது புத்திரராகத் தோன்றியவர். ஐந்தாவது வயதில் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்று வந்தார். 12-வது வயதில் பெற்றோர்களை இழக்க நேர்ந்ததால், தமயன்மார்களை விட்டு விட்டு கல்வியை அபிவிருத்தி செய்து கொள்ள, தருமபுரம் என்ற ஸ்தலத்திற்குச் சென்று, வடுகும் க்ரந்தமும் கற்றுத் தேர்ச்சியடைந்தார். பிறகு அங்கிருந்த தேவஸ்தானத்தின் தலைவராகிய அம்பலவாணக் கவிராயரிடத்தில், தமிழ்க் கல்வியை விருத்திசெய்து, பாண்டித்தியம் அடைந்தார். கவிராயர், இவருடைய அறிவைக் கண்டு வியந்து அந்த மடத்தின் தலைமையை வகிக்க ஒப்புக் கொள்ளுமாறு வேண்ட, இவர் சில உதாரணங்களால், இல்லறத்திற்குப் பிறகே துறவறம் ஏற்க வேண்டும் என்று கூறி மறுத்து, அவரிடம் ஆசீர்வாதத்துடன் விடை பெற்றார். முப்பதாவது வயதில் விவாகம் செய்து கொண்டு, காசுக்கடை ஒன்று வைத்து பொருளீட்டி, குடும்பத்தை நடத்தி வந்தார். தமிழில் பலநூல்களையும் ஆராய்ச்சி செய்ததின் பயனாக, திருக்குறளும், ராமாயணமும் தான் மிகவும் உயர்ந்தவை என்றும் திருக்குறளுக்கு ராமாயணமும் ஓர் விரிவுரை மாதிரி உள்ளதென்றும் முடிவு செய்தார். கம்பராமாயணத்தை மிகவும் அனுபவித்தவராதலால், அதைக்

கீர்த்தனை ரூபமாகச் செய்ய வேண்டு மென்று ஆசை கொண்டு மிக அழகிய முறையில் அப்படியே செய்து, தமிழர்களுக்கு அளித்திருக்கிறார். தொழில் முறையில், பொன் வெள்ளி வாங்க, புதுச் சேரிக்குப் போகும் மார்க்கத்தில், சீகாழியில் தர்மபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த மடத்தில், தன்னுடன் படித்த சிதம்பரம் பிள்ளை என்ற தம்பிரானைச் சந்திக்க நேர்ந்தது. அவர் விரும்பியபடி சீகாழியின் தலத்திற்கு ஓர் பள் பாடிக் கொடுத்தார். பின்னர் அவருடைய வேண்டுகோளின் படி சீகாழியிலே வாசம் செய்து வந்ததால் இவருக்கு "சீகாழி அருணாசலக் கவிராயர்" என்று பெயர் வந்தது.

இந்தக காலத்தில், அசோமுகி நாடகம், சீகாழித் தலபுராணம், அனுமார் பிள்ளைத் தமிழ், முதலிய நூல்களைச் செய்து முடித்தார். இவரிடம் தமிழ் பயின்ற வெங்கடராமய்யர், கோதண்டராமய்யர் என்ற இரு ஸங்கீத வித்வான்களின் தூண்டுதலின் பேரில் தான் இராம நாடகக் கீர்த்தனையைப் பாட ஆரம்பித்தார்.

'ஸங்கீத மென்றால் எளிய நடையில் அமைந்து' "நவரஸங்களும்" பொருந்தியிருக்க வேண்டும் என்று கவி, பாரதியார் சொன்னது நமது கவிராயர் விஷயத்தில் முற்றிலும் உண்மை எனக் காணலாம். சந்தர்ப்பத்துக்கு எற்றபடி வார்த்தைகளை அமைத்து, "பாவத்தை" ப் பாட்டில் காட்டி விடுவதில் மிகவும் கைதேர்ந்தவர்.

ராமாயணம் அரங்கேற்றப்பட்ட ஸ்ரீரங்கத்திலேயே தனது நூலையும் அரங்கேற்ற வேண்டு மென்று அவாவுற்று அவ்வாறே செய்து முடித்தார். மணலி முத்து கிருஷ்ணமூர்த்தி முதலியார், துளஸீ மஹாராஜா, உடையார் பாளையத் துரை, உவரங்கப் புடையார் முதலிய பிரபுக்களால் ஆதரிக்கப் பெற்று பல பரிசுகளும் பெற்றார். சீர்காழியிலேயே குடும்பத்தை நடத்தி வந்து தனது 67—வது வயதில் இறைவன் திருவடிகளை அடைந்தார்.

தமிழில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் பிரபந்தங்கள், ஆகிய பல நூல்களிலிருந்தும் வித்வான்கள் பாடுவதற்குப் பாடல்கள் கிடைத்த போதிலும், கீர்த்தனை ரூபமாக, எளிமையும், பாவமும் ததும்பும் படியாக கவிராயர் பாடல்கள் செய்திருக்கிறபடியால், தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஸங்கீத வித்வானும், எல்லா இடங்களிலும், அவற்றைப் பாடவேண்டியது, மிகவும் அவசியமாகும். தற்போது, சரணம் சரணம், இந்தாவிபீஷணா, என் பள்ளி கொண்டீர் அய்யா, அந்த ராம ஸௌந்தர்யம், என்பது போன்ற சில பாடல்கள் தான் கையாளப்பட்டு வருகின்றன. இனிமேலாவது ராம நாடகத்தின் மற்ற பாடல்களையும் கையாள முற்படா விட்டால், தமிழ் நாட்டின் ஓர் பொக்கிஷத்தைப் புறக்கணித்தவர்களாவோம். மங்களம் கூடத் தமிழிலேயே பாடலாம்.

ஸ்ரீராமசந்திரனுக்கு ஜெயமங்களம், என்ற பாட்டை கவிராயரே செய்து தந்திருக்கிறார். ராமநாடகக் கீர்த்தனைகளைத் தமிழ் நாடு நன்கு பயன் படுத்திக் கொள்ளுமாக.

வாக்கும் பலனும்

ச. ரா. ஸ்ரீ.

பம்பாயின் கடைத் தெருவுகளில் ஒரு நடுத்தர வயதுள்ள தென்னிந்திய வாலிபன் கிழிந்த உடைகளுடன் பிச்சை வாங்கிக்கொண்டு அலைவான். அவன் பெயர் சாமி. அவன் கண்ணில் எவரேனும் தென்னிந்தியர் தென்பட்டால் உடனே அவரை நிறுத்தி "ஐயா! நீர் எந்த ஊர்?" என்று கேட்பான். அவர் ஏதேனும் ஊர் பெயர் சொன்னால், உமக்கு கபிஸ்தலம் தெரியுமா, என்பான். அவர் திரும்ப "அது எங்கேயிருக்கிறது" என்று கேட்டாரே யானால் "உமக்கு கபிஸ்தலம் தெரியாதா—அவ்வூரை விட்டுத்தான் நான் என் சிறு வயதில் ஓடி வந்து விட்டேன்"—என்று அதற்குமேல் மறுமொழி பேசாமல் வருத்தத்துடன் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு வேறு எவரையேனும் தேடிக்கொண்டு கிளம்பி விடுவான். அவனை மாதுங்காவில் தெரியாதவர்கள் எவரும் கிடையாது.

மாதுங்காவில் எவர் வீட்டிலாவது எவருக்காவது திதி வந்ததேயானால் சாமியைக் கட்டாயம் தேடிப்பிடித்து போஜனத்திற்கு உட்கார்த்தி வைப்பார்கள். அன்று அவன் கையில் இரண்டு ரூபாய்களும் ஒரு புது வேஷ்டியும் கிடைக்கும். ஆனாலும் அவன் கந்தலுடன்தான் காணப்படுவான். பிச்சைதான் எடுப்பான். வேஷ்டியையும் ரூபாயையும் கபிஸ்தலத்திற்கு அனுப்பித்து விட்டதாக, அதை ஒரு பெரிய சந்தோஷச் செய்திபோல் எல்லோரிடமும் சொல்லுவான். அவனை ஒரு சிலர் இது ஒரு ப்ரகிரதி என்பார்கள். வேறு சிலர் இவனுக்கு ஒரு 'ஸ்குரூ லூஸ்' என்பார்கள். எது சொன்னாலும் அவனிடம் எல்லோரும் பிரியமாகவேதான் இருப்பார்கள்.

ஒரு நாள் என்னால் என்றும் மறக்க முடியாத கீழ்க்கண்ட சம்பவம் ஒன்று நடந்தது. மாலை வேளையில் ஆபீஸ் விட்டவுடன் போர்பந்தர் வழியாக வந்து கொண்டிருந்தேன். சாமி ஒரு சிறுவனுடன் மிகவும் மும்மரமாகப் பேசிக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஒருக்கால் கபிஸ்தலம் ஆசாமியோ என்னமோ என்று அவனருகில் போய்ப் பின்னால் நின்றுகொண்டேன். பஸ் டிராம் முதலியவைகளுக்குக் காத்துக் கொண்டு, அங்கு ஜனங்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடன் கூடவே நின்றுகொண்டு அவனுடையவும் அப் பையனுடையவும் சம்பாஷணையைக் கேட்கலானேன். நான் நிற்பதை அவன் கொஞ்சமும் கவனிக்கவில்லை.

"தம்பி! உன்னைப் பார்க்க ரொம்ப சந்தோஷம்டா! அதுவும் நீ அப்பா அம்மா எல்லோரும் சௌக்கியம், என்று சொன்னயே அதுவே எனக்குப் பெரிய ஆனந்தம்டா"

"இல்லே மாமா! உங்கம்மாக்குதான் உடம்பு சரியாய் இல்லே."

"அதெல்லாம் ஒன்றுமில்லே. அவளுக்குத் தெரியாமல் நான் ஓடிவந்து விட்டேன் என்று அவளுக்கு ரொம்ப வருத்தம். என்னிடம் தான் அப்பொழுதே சொன்னளே, 'சாமி—என்னை விட்டு எங்கும் ஓடிப்போய் விடாதே! ஓடிப்போனயானல் நான் உன்னைப்பிரிந்த வருத்தத்தினல் என்

உடம்பு கொஞ்சம் கொஞ்சமாக உருகி இறந்துபோய் விடுவேன்; திடீரென்று இறக்கமாட்டேன். உன்னால் ரொம்பக் கஷ்டப்படுவேன்' என்று சொன்னாள் பாவம்''

"உங்கள் அம்மாவின் உடம்பு நிஜமாகவே உருகிவிட்டது, மாமா. அவளுக்கு காச ரோகம் என்று ஊர் பூராவும் சொல்கிறார்கள். அதுவும் நீங்கள் ஊரை விட்டு வந்ததினால்தான், அவளுக்கு அவ்வியாதி வந்தது என்று சொல்கிறார்கள். உங்களை எல்லோரும் திட்டவும் திட்டுகிறார்கள்! நீங்கள் எப்பொழுதாவது இரண்டு ரூபாய் அனுப்புகிறீர்கள் அல்லவா! அதற்கெல்லாம் மருந்து வாங்கிக் கொள்ளுகிறாள். எப்பொழுதும் நீங்கள் திரும்பி வந்துவிடுவீர்கள், என்றே பேத்திக் கொண்டிருப்பாள்'' என்றான் சிறுவன். "நீ எப்பொழுது திரும்பி ஊர் போவாய்?'' என்று கேட்டான் சாமி. "நானா—நானும் உங்களைப்போல் தான் மாமா!'' என்று சிரித்தான். "என்னடா சிரிக்கிறாய், நீயும் ஓடியா வந்து இருக்கிறாய்?'' "ஆமாம்'' என்று பல்லை இளித்தான்.

"அட முட்டாள்! இங்கு பெரிய வேலைகிடைக்கும் என்றா ஓடிவந்தாய்? இங்கு பிச்சை வாங்குகிறேன் நான். இந்த வேலைதான் உனக்கும் கிடைக்கும். நீ ஏன் ஓடிவரவேண்டும்?''

"எங்கப்பாவைத்தான் உங்களுக்குத் தெரியுமே, மாமா! அவர் பிடிவாதம் தான் என்னை வீட்டை விட்டு விரட்டிற்று. எனக்கு வயதாய் விட்டதென்று மோட்டார் கார் துடைக்க வேலைக்கு அனுப்ப விருந்தார். நான் அந்த வேலையை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்றேன். எங்கம்மாவிடமும் ஆனமட்டும் சொல்லிப்பார்த்தேன். 5வது பாரம் மட்டும் படித்து விட்டு அவ்வளவு தாழ்மையான வேலைக்குப் போகமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அப்பாவும் அம்மாவும் ரொம்பக் கண்டித்தார்கள். நீங்கள் ஓடி வந்தமாதிரி வந்தால் இங்கு வேலையாய் இருக்கலாம். அப்பாவிற்கு நாமும் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு தடவையோ இரண்டு ரூபாய் 4 ரூபாய் அனுப்பலாம், என்று நினைத்து வந்து விட்டேன்''

"அட பாவமே— நான் ஓடிவந்தேன் என்று நினைத்தா ஓடிவந்தாய். யார் மேல் ஆணைவைக்கச் சொன்னாலும் சரி—உனக்கு இங்கு வேலை கிடைக்காது—திரும்பிப் போய் விடுடா—நான் சொல்கிறனே என்று வருத்தப்படாதே! உன் தாயார் உயிருடன் இருக்க வேண்டுமானால் நீ திரும்பிப் போய்விடு. அவள் தான் உனக்குப் பாலூட்டி உன்னை உன் சிறுவயதில் வளர்த்தாள். உன்னை ராப்பகலாய் வியாதி ஒன்றும் வாமல் உனக்காக அவள் பத்தியங்களுடன் சாப்பிட்டு இருந்தவள். உன் உயிருக்காக அவள் உயிரையும் தியாகம் செய்யத் தயராய் இருப்பவள். நீ ஓடி வந்து விட்டதை நினைத்து எவ்வளவு வருத்தப்படுவாள் தெரியுமா—உன் பிரிவின் வருத்தத்தினால் அவள் வியாதி உள்ளவள் போல் ஆகிவிடுவாள். அதனால் அவள் ஆயுட் காலம் குறைந்து விடும். திரும்பிப் போய் விடப்பா குழந்தை!''

"என்ன மாமா எங்கம்மா செத்துப் போய் விடுவாள் என்று சொல்கிறீரே பின் நீங்கள் ஏன் ஓடி வந்தீர்கள்?''

"நான் ஓடி வந்தேன்; அதன் பலனைத் தான் நான் அநுபவிக்கிறேன்; ஊரோடு இருந்தால் கர்ணம் உத்தியோகம் பார்த்துக்கொண்டு கௌரவமாக இருந்திருப்பேன். இப்பொழுது வெட்கம் மானம் விட்டுப் பிச்சை எடுக்கிறேன்; திருடவும் செய்கிறேன். நீயும் என்னுடன் கூட என்னைப் போல இருக்க சம்மதிக்கிறாயா?''

"நிச்சயமாக தெரியாத்தனமாகத் தான் மாமா வந்து விட்டேன். எங்கம் மாவை நினைத்தால் தான்............" என்று விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டான், அந்தப் பையன்.

"அம்பி அழாதேடா! என் அம்மா விடம் நான் கட்டாயம் வந்து அவளைச் சீக்கிரமாகப் பார்ப்பதாகச் சொல்! அவள் சொன்னுள் 'நீ ஓடிப்போய் விடப்போகிருய்—அப்புறம் ஆபத்தில் எங்கேயாவது சிக்கிக்கொண்டு அம்மா அம்மா என்று கூச்சல் போட்டாயே யானுல் உனக்கு யார் உதவிக்கு வரு வார்கள்!' என்ருள். அவளிடம் நான் ஆபத்து ஒன்றும் இல்லாமல் சௌக் கியமாய் இருக்கிறேன் என்று சொல். அதோபார் எதிர்த்தாப்போல் தெரிகி றதே, அது ஒரு லாலா கடை. நீ இங் கேயே இரு, நான் அங்கு போய்விட்டு வருகிறேன்; ரோடைத் தாண்ட யோ சனை செய்யாதே. கார் மோட்டார் எல் லாம் குறுக்கும் நெடுக்கும் போகிறது" என்று சொல்லிவிட்டு அந்த லாலா கடைக்குப் போனுன்.

"ஐந்து நிமிஷம் கூட இருக்காது; ஐந்து ரூபாய் நோட்டுகளில், ஒரு பத்து நோட்டு இருக்கும், அவனிடம் கொடுத்துக் கொண்டே அப்புறமும் இப்புறமும் திருட்டுப்பார்வை பார்த் துக் கொண்டு "அம்பி நேராகப் போனுயானுல் இன்னும் 15 நிமிஷங் களில் மதராஸ் மெயில் போகிறது. ஜல்தி போ" என்று சொல்லிக் கொண்டே வேறு எங்கோ போக முயன்ருன். இவனை அந்தக் கடை லாலா ஒரு போலீஸ் சேவகனிடம் சுட்டிக் காண்பிப்பதையும் பார்த்தேன். அந்தப் பையன் அனுவசியமாகப் போலீஸாரிடம் சிக்குவானேன் என்று நினைத்து அவன் கையைப் பிடித்துக் கொண்டு விக்டோரியா ஸ்டேஷனுக் குப் போகத் திரும்பினேன்.

"ஐயோ அம்மா!" என்று ஒரு அலறல் என் மார்பைப் பிளந்தது. ஒரு நிமிஷம் செயலற்று என் சுய புத்தி யையும் இழந்து நின்றேன். சுமார் 10 கெஜ தூரத்திற்கப்பால் 'சாமி ஒரு பெரிய லாரியால் மோதப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவ னைச்சுற்றி ஒரே கூட்டமும், போலீ ஸும் கூடிவிட்டது.

அந்தக் காட்சியைக்காணச் சகிக்கா மல் அப்பையனை அவசரம் அவசரமாக ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கொண்டு போய் ரயில் ஏற்றிவிட்டேன். அங்கு அவனிடம் "தம்பி! உன் தாயாரின் உத்திரவில்லாமல் அவளை விட்டுப் பிரிந்தாயேயானுல் உனக்கும் அக்கதி தான்" என்றேன்;

'இல்லை ஸார்! கட்டாயம் இனி ஊர் போன பிறகு எங்கும் ஓட மாட்டேன்' என்று சொல்லி வருத்தப்பட்டான்.

திரும்பி வரும்பொழுது இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. நிலவு வெளிச்சத்தில் அந்த ரத்தக் கறை தான் பிரகாசித்துக் கொண்டிருந்தது. கூட்டமும் இல்லை. அவனுடைய பிரே தமும் இல்லை. ஆனுல் அவன் 'ஐயோ அம்மா' என்று அலறினதின் சப்தம் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே யிருந்தது.

இதோ புதியசக்தி!

இதற்காக அதிகச் சிலவுமில்லை

சி. எம். சாமி

மன்மதக் குளிகை

உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறது

இதில் தாதுவிருத்தியைத் தரக்கூடிய அநேக சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன, இது உடலில் ஒருவித நூதன சக்தியை உண்டாக்கி, நரம்புகளை முறுக்கேற்றி சரீரத்தின் எல்லாப் பாகங்களையும் வலுப்பெறச் செய்கிறது. மேகச்சூடு, குத்து, குடைச்சல், இடுப்புவலி, பலவீனம், ஆயாசம், தாகம், இருதயத்துடிப்பு, தாது நஷ்டம், முதலியவைகளை நீக்கி, இந்திரியத்தை மணிபோல் கட்டி, பலம், மனோற்சாகம் முதலியவைகளையும் உண்டாக்குகிறது.

20 குளிகை விலை ரூ. 2—0—0.

தலைமைஆபீஸ்: **மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S.I**

பிராஞ்சு :—(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
,, (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

ஒரே ஒரு மாதம் வரை—ஒரு கடிகாரம் ரூ. 3/8



நவீன அமைப்பும், அழகான வடிவும் கொண்ட கை கடியாரம் 5 வருடம் உத்திரவாதம் சரியான காலம் காட்டும். நல்ல குரோமியம் கேஸில் விலை ரூ. 4/8. ரோல்டு கோல்டு 10 வருடம் உத்தரவாதம். 4 ஜூவல் கொண்டது ரூ. 6/8. தபால் பாக்கிங் 10 அணா. 3 கடிகாரம் வாங்கினால் தபால் சார்ஜ் இனாம். 6 கடியாரமாயிருந்தால் ஒரு கை கடியாரம் இனாம். வாங்கும் கடியாரத்தின் நம்பரைக் குறித்து எழுதவும். ஒரு வாரத்தில் சம்மதமில்லாவிடில் பணம் வாபஸ். காட்லாக் இனாம்.

CALCUTTA CLOCK Co., (Sec-153) 15/1, Joymitter St, P. o. Hatkhola, Calcutta.

ஞாபக சக்தி

ஏ. ஜி. ஆர்.

பிறந்த வேளையின் பயனோ என்னவோ ஐந்து நிமிஷத்திற்கு முந்தி நடந்த சம்பவங்களையும் மறந்து விடும் தன்மை வாய்ந்தவன் எனது நண்பன் கோபு. ஞாபக சக்தியென்பது துளி கூட அவனுக்கில்லை. நாங்களிருவரும் பள்ளியிலிருந்தே இணை பிரியாத் துணைவர்கள். எத்தகைய உபாயத்தாலும் அவனுக்கு ஞாபகசக்தி யுண்டாக்க முயற்சித்தும் ஒன்றும் பயனில்லாமல் போய் விட்டது. பள்ளிக்கூடத்தில் அவனை எல்லோரும் பரிகசிப்பார்கள். ஞாபக மறதியினால் அவன் பட்ட உதைகள் கொஞ்ச நஞ்சமல்ல. பள்ளிக் கூடம் விட்டதற்கப்புறம் அவனைப் பல வருஷங்களாகப் பார்க்கவே இல்லை. இத்தகைய ஞாபக சக்தி வாய்ந்தவன் ஏறக்குறைய பத்து வருஷங்கள் கழித்து ஒரு நாள் விழுப்புரம் ரயில்வே ஸ்டேஷனில் "அடே! நீ ராமு அல்லவா?" என்று என்னை அடையாளங்கண்டு கொண்டது வியப்பிலும் வியப்பல்லவா?

மாயவரம் வண்டிக்காக, பிளாட்பாரத்தில் காத்துக் கொண்டிருந்தேன். வண்டி வருவதற்கு இன்னும் ஒரு மணி அவகாச மிருந்தது. அப்பொழுது தான், மேலே கூறிய வாறு எனது தோளைப் பிடித்துப் பலமாக உலுக்கி மேற் கண்ட கேள்வியைக் கேட்டான்.

நான் திடுக்கிட்டுத் திரும்பினேன். முதலில் அவனை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. கொஞ்சநேரம் ஒன்றும் தோன்றாது இருந்தேன்.

"என்னடா முழிக்கிறாய்? அடையாளம் தெரியவில்லை? உனது பள்ளிக்கூட நண்பன் கோபுவை இதற்குள்ளாகவா மறந்து விட்டாய்?" என்றான். ஆம், அப்பொழுது தான் நினைவிற்கு வந்தது.

"அடே கோபுவா? எப்படி மாறிப் போயிருக்கிறாய்? ஆள் அடையாளமே தெரிய வில்லையே? மேலும்——"

"மேலும் என்ன, மேலும் கீழும்!'

"இல்லை, நாமிருவரும் சந்தித்து பத்து வருட காலமிருக்கும். என்னைப் பற்றிய ஞாபகம்கூட உனக்கு இருக்குமோ——"

"என் இல்லாமல்? இல்லாமலா உன்னை அடையாளங் கண்டு கொண்டேன். இதற்குள்ளாக மறந்து விடுவேனா?"

"அப்படியானால் உன்னிடம் பெரிய மாறுதல் தான் உண்டாயிருக்கிறது. முன்னெல்லாம் ஐந்து நிமிஷத்திற்கு முன்பு நடந்த விஷயங்களைக் கூட மறந்து விடுவாயே இப்பொழுது-—"

"அந்தக்காலம் இப்பொழுது மலையேறிப் போய் விட்டதே, தெரியுமா?"

"எப்படி?"

"இவ்வளவு நாள் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று நினைக்கிறாய்?"

"எனக் கெப்படித் தெரியும்?"

"ஞாபகசக்தி பயிற்சிசெய்துகொண் டிருந்தேன். எனது ஞாபகசக்தியை எந்த விதத்தில் வேண்டுமானாலும் பரீக்ஷை செய்து கொள்."

"சரி! சென்ற மகாயுத்தம் நடந்தது எப்பொழுது?"

"1914—1918"

"இப்பொழுது அமெரிக்க குடியரசுத் தலைவர் யார்?"

"ரூஸ் வெல்ட் மூன்றாந்தடவையாக இந்தப் பதவியை வகிக்கிறார்."

"உலகிலேயே அண்டப் புளுகு புளுகுபவர் யார்?"

"டாக்டர் கொயபில்ஸ்"

"எவ்வளவு மாகாணங்களில் காங்ரஸ் ஆட்சி இருந்து வந்தது? எவ்வளவு காலம்?"

"ஏழு மாகாணங்களில், சுமார் $2\frac{1}{4}$ வருஷங்கள்."

உடனுக்குடன் மறுமொழி கொடுத்ததைக் கண்டு அளவிலா ஆனந்த மடைந்தேன். "சபாஷ்! பழைய கோபு அல்ல இப்பொழுது நீ!" என்று அவனைத் தட்டிக் கொடுத்தேன்.

இதற்குள்ளாக மாயவரம் செல்லும் வண்டியும் வந்து நின்றது. ஜனங்கள் பெருத்த ஆவாரத்துடன் ஏறுவதும் இறங்குவது மாயிருந்தனர்.

"இருக்கட்டும்! எதுவரைக்கும் போவதாக உத்தேசம்?" என்றான்

"மாயவரம் வரை!" என்றேன்.

"நானும் மாயவரம் தான் போகிறேன். வா, வண்டியில் ஏறிக் கொள்வோம்" என்றான்.

பத்து நிமிஷத்திற்குப் பிறகு வண்டியும் புறப்பட்டு விட்டது. இன்னும் அது பிளாட்பாரத்தை விட்டு நகர்ந்திருக்காது. பிளாட் பாரத்தில் "ஓ ஹோ!" என்ற கூச்சல் கேட்டது. எத்தகைய ஆரவாரம் என்று அறிய ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தேன்—நகரும் வண்டியில் ஒரு பிரயாணி ஏற முயற்சிப்பதும் அதைத் தடுக்க அதிகாரிகள் செய்த கூக்குரலுமே காரணம் என்று தெரிய வந்தது. கோபுவும் ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தான். உடனே ஆவேசங் கொண்டவனைப் போல "அடே! அந்த அபாய அறிவிப்பு சங்கிலியை இழு! அவசரம்! அவசரம்!!" என்றான்.

"உனக்கென்ன பைத்தியமா? அக்காரணமாய் உபயோகிப்பவர்களுக்கு அபராதம் ரூபாய் அம்பது" என்று கொட்டை எழுத்துக்களில் காணப் படுகிறதே, தெரியவில்லையா?" என்றேன்.

"நாசமாய்ப் போச்சு! அதோ என் மனைவி ராஜம் அல்லவா அங்கே நிற்கிறாள்! மாமனார் வீட்டுக்குப் போகிறவன், அவளுக்கு காப்பி வாங்க "ஐ. ஆர்" க்கு போய்க் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் பேசிக் கொண்டே இருந்து விட்டு ஞாபக மில்லாமல் உன்னுடன் இந்த வண்டியில் ஏறி விட்டேன்" என்றான்.

நான் மேலே பேச வில்லை. அதற்கப்புறம் அவனுடைய ஞாபகசக்தியை பரீக்ஷிக்கும் சந்தர்ப்பமும் எனக்கு ஏற்படவில்லை.

காமப் பித்தன்

ஜி. அனந்தராம்

"வாம்மா......யார்?....கோகிலாவா? வா!.........ஏன் உன் புருவம் நெருங்குகிறது? என்னை ஏன் அப்படிப் பார்க்கிறாய்? உதட்டை மடித்துக் கடிக்கிறாயே. அது கூட உன் முகத்திற்கு எவ்வளவு அழகைக் கொடுக்கிறது தெரியுமா? பயப்படாதே! என்னை எதற்கு அவ்வளவு கேவலமாக, கலவரத்துடன் பார்த்து மிரள வேண்டும்?

என்னை இன்னும் நீ தெரிந்து கொள்ளவில்லை போலிருக்கிறது. உன்னைப்போன்ற ரஞ்சிதப் பாவைகளுக்கு உகந்த ஆண்தான் நான். மேலும் உங்களை அடைந்தும் உங்கள் லக்ஷியங்களைப் பூர்த்திசெய்யத் தெரியாது வெவ்வேறு கவனங்களுள்ள கணவன்மார்களைப் போலல்ல. நான் ஒரு காமப்பித்தன். பெண் என்றால் பெருமதிப்பு கொடுப்பேன். பெண்ணையும் குதிரையையும் தடவித் தடவி, செல்லத்தட்டு தட்டியே இன்பிக்க வேண்டும்.

உம்—ஏன் வாயைக் கோணிக் கொண்டு மேல் நடக்கப் பார்க்கிறாய்? அட! போகிறாளே லேசாகப் புன்னகை பூத்தவண்ணம். அந்தப்புன்னகை பெண்களுக்கே ஒரு தனி அழகைக் கொடுக்கிறது. இந்த உலகத்தில் உள்ளோர் யாவரும் பெண்களாய், நான் ஒரு ஆணாய் இருப்பின் ....

யார் அது அங்கு சிரிக்கிறது. அந்த ஒலி கேலியாகப்படுகிறதே! இங்கு யாரையும் காணோமே. ஒரு வேளை அந்தராத்மா என்று பிதற்றுகிறார்களே அதுவாயிருக்குமா.........ஹ.....ஹா என் முன் வர எந்தப்பெண்ணும் ஏன் ஒதுங்குகிறார்கள்? என்ன அசிரத்தையான அலட்சிய நோக்கு! அந்தக் கருங்கண்களையும் பிதுங்கிய உதடுகளையும் ஓயாது..... ....

பேசக்கூட.........ஏன், காணக்கூட அஞ்சி, அல்ல......வெறுத்து கண்களைப் பெரிதாக்கி விழித்து அவசரமாக நடக்கிறார்கள். அவர்கள் என்ன விதமாக என்னை உதாசீனம் செய்தாலும் நான் என்னமோ, அவர்களை வெறுக்கவோ, வெறுத்து மறக்கவோ மாட்டேன். அவர்கள் அழகில் சிக்குண்டு திளைக்கும் தனிக் கலாரசனை என்னுள் விகசித்து ஸ்புடமாயிருக்கிறது.

என் உள்ளத்தின் உயிர் தினமும் சொல்லுகிறது, "மாயை உன்னைக் கேலிசெய்து, கண்ணாமூச்சி ஆடுகிறாள்" என்று. நான் நம்பமாட்டேன்.

மாயை என்று ஒன்று இருக்குமாயின் அதுதான் நம் மனச்சாட்சி. அது, நாம் நினைக்கும், சொல்லும், செய்யும் விஷயங்களைப் பற்றி 'லெக்சர்' அடிக்க வரும்போதுதான் எனக்கு அதைக் கண்டால் கொஞ்சங்கூடப் பிடிக்கிறதில்லை.

அதன் வார்த்தைகளை நான் ஏற்றுக் கொண்டதே கிடையாது: ஒரு வேளை மனச்சாட்சி ஒன்று இருந்திருப்பின் அது எப்போதோ நசுங்கி விட்டிருக்க வேண்டும்.

எப்போது? என்று கேட்கிறீர்களோ? என்னுள் இருந்த காமவிளக்கு என்று ஏற்றப்பட்டதோ அன்றுதான்.

பக்கத்து வீட்டு பட்டம்மாள்தான் என்னுள் மூடியிருந்த ஒரு திரையை விலக்கினள். அதிலிருந்து காமம் ஆஜானுபாஹுவாய் வெளிக் கிளம்பியது. திரை மூடவேயில்லை!

இதோ இவள் தான் பட்டம்மா. வயது 14. உருண்ட சதைபிடித்த முகம். பெரிய கண்கள் சிறிய மூக்கு பருத்த கழுத்து, நிறைந்த உடல், விரிந்த உதடுகள், சற்று எடுப்பான மார்பு, சிவந்த மேனியல்ல, மாநிறம் தான், நல்ல அழகு என்று சொல்வதற்கு மில்லை. ஆனாலும் அந்தக் கண்கள் கருத்து சுழன்று பார்க்கவும், உதடுகள் சிவந்து, நிறைந்து, எடுப்பாக "வாவா" என்று அழைக்கவும், உடலின் அமைப்பு உள்ளத்தில் பதியவும் என் புரட்சியற்ற வாழ்க்கையின் ஆரம்ப வாலிபத்தைக் கவ்வியது.

அதிக நாள் கழியவில்லை. என் விருப்பத்தை அறிந்த அவள் என்னை சாமர்த்தியமாகத்தான் மடக்கினள். அவள் உடலை என் இன்பக் கருவியாக்காது என்னைச் சோதித்தாள். என் ஆசை—உடலோடு, வாலிபத்தோடு, அந்த சமயத்தோடுதான் என்பதை ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டேன். அவள் திடுக்கிட்டு மெள்ளப் பின்வாங்கினள்.

பாவம்! அசடு!! அதைக் கலியாணம் செய்துகொண்டு ஆயுள் வரை மாரடிக்க வேண்டுமாம்.

அட அசடே. இந்த உலகத்தில் நீ ஒருத்திதானு பெண்? என் வட்டாரத்திற்குள் எவ்வளவோ ஸரவிகள் வரலாம். பின் உன்னைக் கழுத்தில் கட்டிக்கொண்டுதான் கடைசிவரை இருக்க முடியுமா?

மூட நம்பிக்கையுள்ள மற்றவர்களைப்போல், விஷய முணராத சமூகத்தைப்போல், கற்பழிதல் என்னும் பண்பின் அந்தரார்த்த முணராமல் ஏதோ வேறு விதமாய் எண்ணிக்கொண்டிருப்பவள் பட்டம்மாள்என்று தெரிந்தது. ஆண்பெண் இருவரில் ஒருவரை ஒருவர் கண்டு ஆசைப்பட்டு பறந்து தவிக்கும்போது அவர்கள் அவ்வின்பத்தை பூர்ணமாய், தங்குதடையின்றி, கலவரம், அச்சம், அவமானம் எதுமின்றி சுகிக்கலாம். அப்போது பெண் கற்பழிந்தவளாகிறளா, இல்லை. இருவர்பாலும் ஆசை பிரதிபலிக்கும் போது அவர்களில் ஒருவர் கற்பழிந்தவராவது எப்படி? பலவந்தமாக இஷ்டமில்லாதபோது ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வதுதான் கற்பழிதல். இதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

*　　*　　*

ஏமாற்றம்! பெண்கள் விஷயத்தில் ஏமாற்றம் ஆண்களுக்குக் கசக்கிற தில்லை. என்னைப் பொறுத்தமட்டிலுமாவது அப்படி ஏமாற ஏமாறத்தான் பன்மடங்கு காம உத்வேகம் பெருகுகிறது. அது உச்ச நிலை அடையும் போது, வேண்டுமென்றே கட்டாயமாகக் கசக்கிப் பருகும் இன்பம் வஞ்சத்தைத் தீர்க்கிறது.

"அதன் பயன்தான் இது" என்று இளிக்கிறது உடல், வெட்கங் கெட்டது. தன்னைத்தானே கெடுத்து அசிங்கப்படுத்திக்கொள்ள அதுவே காரணம். அதன் நினைவை அடக்கத்தானே, இவ்வளவு பாடுகளும்?

வேதாந்தி என்ற ஆத்மா சொல்லுகிறதாம்..........

"உடல் சுகம் காண்பான் வேண்டி, காதல், பெண் வேட்டையாடாது" என்று.

காதலாம் காதல்! பூ!! காமம்தான் கெட்டிக்காரத்தன முடையது. ஒருத்தி கிடைக்காவிட்டால் அது தற்கொலையோ, மனமுடைவோ, ஹிருதயம் பீறிடுதலோ போன்ற அசட்டுக் காரியங்களில் மனிதனை அழிக்காது.

ஒருத்தியுடனேயே, காம விகாரமின்றி, காதலித்து, ஆத்மச்சுவைப்பு, பேரின்ப மலர்ச்சி என்று பைத்தியக்காரத்தனமாய்த் தெருத் திண்ணை வேதாந்தம் பேசி சுகமனுபவிக்க முடியுமோ, வாழ்க்கையை கழிக்க முடியுமோ.

சாதாரண நட்பு, உயரிய நட்பு, மிருக உணர்ச்சியற்ற சமபாவஸ்நேகிதம், அன்யோன்ய ஸ்திரீ புருட வித்தியாசமற்ற கலந்த மனப்பான்மை, சகோதர பாவம் இதெல்லாம் பெண் என்றும் நெருப்பும் காந்தமும்போன்ற சக்தியினிடம் காற்றும் இரும்பும் நெருங்குவதுபோல்தான் ஆணின் உறவு. காமமோ மோஹமோ இரண்டுமன்றி வேறு உணர்ச்சி எற்படுவது சிரமம்.

கதை யுணர்ச்சியின் உத்வேகம், மிருகசபலம், அழகின் அழைப்பு, உடல் சுவை—திருப்பித்திருப்பி இதுதான். ஞ்வென்றால் முகாரத்தான் சொல்லுகிறது.

நான் காமத்திலேயே உழலுகிறேன். என்னை நிந்தித்துப்பயன்? உடல் மோசமாகிவிட்டது. உயிர் அழியவில்லை. வீர்யம் போய்விட்டது. ஆசை நசுங்கவில்லை.

நான் என் செய்வேன்? உலகமே காமத்தில் அடக்கம். ஆண்தான் காமத்தின் கருவி. காமம் அவனை எடுத்துப் பந்தாடுகிறது. அவன் ஆடும்போது அவளையும் இழுத்துக்கொண்டு ஆடுகிறான். இல்லை; அவள் அவனை இழுத்துக்கொள்ளுகிறாள். அல்லது ஸ்திரீ தன்மை, அழகு, அலங்காரம், நடை, யுடை, பாவனை, அவனை இழுக்கிறது.

இப்படியே வாழ்கை. இரண்டில் ஒரு ஜாதி நசிக்கும் வரை—நசிக்குமா? நசித்தால் உலகத்தில் வாழ்க்கை நடத்த முடியுமா?

பிறகு! இந்தப் பிரச்னைகள்தான்.

ஜோதிஷ மகுட வர்த்தனர்

9—5—'38-ல் சென்னை ஜோர்திஷர் மகாநாட்டின் சபைத் தலைவர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், டீமகவி, சுகர்புஜண்டர், சாஸ்திர நிபுணர். ஜாதகம் கணிக்க ரூ-2. ஒரு வருஷத்திற்கு ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்துரு, பிரயாணம், சுபம், அதிர்ஷ்டம், மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், ஒவ்வொரு காரியம் சித்திபெறும் ராசியில் சந்திரனின் நாட்களும் தினசரி கால அளவும், மற்றும் பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ-3. ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 3. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

புரபஸர் N. V. சுப்பிரமணியம், J. M., & J A

நெ. 7, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத். P.O. S. I. Ry (சென்னை

ரூ. 1,550 இனும்

சித்த வசீகர கவசம்:—ஆண், பெண் யாராயிருப்பினும், எவ்வளவு பிடிவாதமாயிருந்தாலும், நீங்கள் நினைத்த மாத்திரத்தில் வசீகரிக்கப்பட்டு, உங்களுக்கு அடங்கி நடப்பார்கள். விலை:—தங்க மூடியிட்டது ரூ. 6/8. வெள்ளி ரூ. 2/12. தாமிரம் ரூ. 1/15. (3-க்கு விலை ரூ. 5.)

லக்ஷ்மி கவசம்:—ஐச்வர்யம் வேண்டுபவர்கள் இதை அணியவேண்டும். கிருஹக் கோளாறுகளை வென்று வெற்றி அளிக்க வல்லது. மேலும், விரோதிகளை வெல்லும், பரீட்சை, வியாபாரம், உத்தியோகத்தில் வெற்றி அளிக்கும். சந்ததி வேண்டுபவர்கள் இரு கவசங்கள் அணியவேண்டும். ஆணுக்கு ஒன்றும், பெண்ணுக்கு ஒன்றும். விலை:-தாமிரம் ரூ. 1/15. (3-க்கு விலை. ரூ. 5.) வெள்ளி. ரூ. 2/12. தங்கம் ரூ. 6/8. தபால் செலவு தனி. ஆனால் ஒரே தரம் இரண்டு கவசங்கள் வாங்கினால் தபால் செலவு இனும்.

குறிப்பு:—(1) இதற்கு உள்ளதாக உள்ள குணங்கள் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1550 இனும். (2) குணமில்லாவிடில் பணம் வாபஸ். (3) இதை உபயோகிப்பதால் யாதொரு சிரமமும் ஏற்படாது.

Shri Swami Sat Narayan Jeotish Ashram, (C.T.M.) Hoshiar Pur, N.W.R.

சந்திரோதயம்

வருஷ சந்தா

இலங்கை முதலிய

உள்நாடு ரூ. **1-8-0**

வெளிநாடு ரூ. **3-0-0**

ஆறுமாத சந்தா கிடையாது.

சந்தாத் தொகையை உள்நாட்டிலுள்ளோர், மணியார்டர் அல்லது போஸ்டலார்டர் மூலமும், வெளிநாட்டிலுள்ளோர் பிரிட்டிஷ் போஸ்டலார்டர் மூலமும் முன்பணமாக அனுப்ப வேண்டும். இலங்கையிலுள்ளோர் இலங்கை போஸ்டலார்டர் வாங்கியனுப்பலாம். வி. பி. மூலம் அனுப்பப்பட மாட்டாது.

சந்தா மானேஜர்

சந்திரோதயம்

60, தம்பு செட்டி தெரு, சென்னை.

டோங்ரேயின்

பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு பிரசித்தி

பெற்ற டானிக்

எங்களூர்ப் பாடசாலை

[என். எஸ். ஸ்ரீநிவாஸன்]

ஒவ்வொருவனுக்கும் அவனவனுடைய தேசத்தைப் பற்றியோ, கிராமத்தைப்பற்றியோ, கிராமத்திலுள்ள விசேஷங்களைப் பற்றியோ, சொல்லிக் கொள்வதில் ஒரு தனிப்பெருமை உண்டு. இது ஒவ்வொருவனுக்கும் இயற்கையாக ஏற்பட்ட குண விசேஷம். ஆகவே எங்களூர்ப் பாடசாலையைப்பற்றிச் சொல்வதில் எனக்கும் ஒரு பெருமை உண்டு என்றுதான் நினைக்கிறேன்.

எங்கள் ஊர் ரொம்பவும் பெரியது மல்ல, சிறியது மல்ல; நடுத்தரமான ஒரு கிராமம். எப்படியோ படாத பாடெல்லாம் பட்டு மேலதிகாரிகளின் தயவினால் ஒரு பாடசாலையை ஏற்படுத்திவிட்டார்கள். சாணத்திலேயே உழன்று நெருக்கமான இடத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த மாடுகளுக்கு விடுதலையளிக்கப்பட்டது. நாட்டாண்மைக்கார முதலியார் மாட்டுக் கொட்டாய் கொஞ்சம் 'ரிபேருடன்' மாணவர்களின் கல்விச் சாலையாக ஆக்கப்பட்டது. கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த மாடுகளுக்கு விடுதலையளித்ததற்காகவும், எதேச்சையாய் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளுக்கு இருக்க இடங்கொடுத்து உதவியதற்காகவும் முதலியாரவர்களுக்கு மாதம் நான்கு ரூபாய் வீதம் பிரதிப் பிரயோஜனம் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. படித்துவிட்டு வேலையில்லாது அலைந்து கொண்டிருந்த முதலியாரவர்களின் மைத்துனரை வாத்தியார் வேலையில் வைத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலை ஆரம்பமான புதிதில் புதுத் துடப்பம் நன்றாகத்தான் பெருக்கி வந்தது; நாளாக ஆக எல்லாவற்றிற்கும் ஏற்படும் இயற்கையான குணம் துரதிருஷ்டவசமாய் அதையும் பற்றிக் கொள்ளாமலில்லை. ஒன்று, இரண்டு, பிறகு மூன்று உபாத்தியாயர்கள் வரையில் ஆயிற்று. பாடசாலையிலும் சுற்றுப்புறக் கிராமங்களெல்லாம் சேர்ந்து 100 பிள்ளைகள் வரை படித்து வந்தார்கள். எல்லா ஊர்களிலும் நடப்பதைப் போல் 'எங்கள் பிள்ளைகளும்' பாடசாலைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள்.

திராவிட பிரச்னையே நாட்டில் பலமாய் இருக்கிறது. அதிலும் ஆதித் திராவிட பிரச்னையைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? ஆதித் திராவிடப் பிள்ளைகள் இருந்தால்தான் 'டீச்சிங் கிராண்ட்' என்ற உத்திரவ எல்லாப் பாடசாலைகளுக்கும் போல் எங்களூர் பாடசாலைக்கும் கிடைத்தது. என்னமோ உபாத்தியாயர்களுடையவும் ஊராருடையவும் ஒத்துழைப்பினால் 10, 12 ஆதித் திராவிடப் பிள்ளைகளின் பெயர் அட்மிஷன் ரிஜிஸ்டரில் ஏறி விட்டது. ஆனல் பாடசாலைக்கு ஆஜராகிக் கொண்டிருந்தார்களா என்று கேட்கிறீர்களா? இதில் தான் உபாத்தியாயர்களுடையவும், கிராமத்தாருடையவும், பாடசாலைத் தந்திரம் அடங்கி இருக்கிறது.

இப்பொழுது பாடசாலை இருக்கும் இடம் எல்லோரும் வந்து படிக்க வசதியற்றதென்றும் வேறு தனிமையான தோரிடம் வேண்டுவது அத்யா

வசியமென்றும் மேலதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர்களும் உபாத்தியாயர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கவேண்டியதில் காட்டும் தாமத புத்தியைப் பிரயோகிக்காமல் சீக்கிரத்திலேயே பாடசாலைக் கட்டிடத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்துவிட்டார்கள்.

இப்பொழுது பாடசாலை ஊருக்கு ஒரு பர்லாங் தூரத்தில் தனிமையான இடத்தில் ஒரு வித தொந்தரவும் இல்லாமல் இருக்கிறது.

இப்பொழுது பாடசாலையில் ஆதித்ராவிடப் பிள்ளைகளும், அதிலும் இதிலும் பட்டதும் படாமலுமுள்ள எழெட்டு வீட்டு இதர பிள்ளைகளும் தான் படித்து வருகிறார்கள். பாடசாலையில் மொத்தம் ஐந்து வகுப்புகள். நான்காவது ஐந்தாவது வகுப்புகளில் பிள்ளைகளே கிடையாது. முதல் வகுப்பில், அதாவது பாடசாலை ஏற்பட்ட நாளாய் உயிரெழுத்தே கற்றுக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் சங்கியை 12. இரண்டாவது வகுப்பில் இரண்டு பையன்கள். மூன்றாவது வகுப்பில் ஒரே ஒரு பையன். இதில் நான்காவது ஐந்தாவது வகுப்பு ஹெட்மாஸ்டருடையது. பாடசாலைப் பொறுப்பெல்லாம் அவருடையதல்லவா?

பாடசாலையில்தான் வேலையில்லையே. ஆகவே ஹெட்மாஸ்டர், முதலியார் வீட்டில் 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கிறார். பாடசாலையில் இரண்டு வருஷமாய் முதல் வகுப்பில் படித்து வந்த பிள்ளைகள் இப்பொழுது எட்டு மாத டியூஷனில் நான்காவது வகுப்பிற்குத் தகுதியுள்ளவர்களாகப் பயிற்சி யளிக்கப்பட்டிருக்கிறார்கள். முதலியார் வீட்டு டியூஷனில், பாடசாலைக்குப் போகாமல் நின்ற மற்ற பிள்ளைகளும் கலந்து சொண்டிருக்கிறார்கள். பாடசாலையை விட இங்கு ஒன்றரை மடங்கு ஆஜர்சங்கியை அதிகம். ஹெட்மாஸ்டருக்கு ஓயாத வேலை. பிள்ளைகளுக்கும் மூச்சுவிட ஒழியாத வேலை. உண்மையில் இவர் பாடசாலையில் இருக்கும் ஹெட்மாஸ்டர்தானா என்ற சந்தேகம் சில ஸமயங்களில் எனக்கு ஏற்பட்டு விடுகிறதுண்டு. அதற்குக் காரணம் அவர் இங்கும் அங்கும் காட்டும் சிரத்தையின் வித்தியாசம்தான்.

அவ்வளவு என்ன? பாடசாலையில் படிக்கும்போது "ஒன்று நான்கு ரூபாய் வீதம், எட்டு நாற்காலிகளின் விலை என்ன?" என்று கேட்டால் 69 புத்தகங்கள் என்று வாய் கூசாமல் பதில் சொல்லிவந்த எங்கள் மணிகூட இப்பொழுது டியூஷன் பயிற்சிக்கப்புறம் விடை தப்பாயிருந்தாலும் புத்தகம், பென்ஸில் என்று சொல்லாமல், முப்பத்தெட்டே முக்காலணா, 67 பை எட்டணா என்று பதில் சொல்லும் பாண்டித்யம் பெற்றிருக்கிறானென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன், எங்களூர்ப் பாடசாலையின் மகிமையை! இன்னும் இரண்டு வருஷங்களில் அதிகாரிகள் மாத்திரம் பர்மிஷன் கொடுத்தால், எங்கள் மணியை நான்காவது பாரத்தில் சேர்த்து விடுகிறேன் என்று உறுதி கூறுகிறார் ஹெட்மாஸ்டர். நான்காவது பாரமா? நான் B. A. பாஸ் செய்து உத்தியோகமெல்லாம் செய்வேன் என்கிறான் எங்கள் மணி. எனக்கோ அவன் அதற்குள் I. C. S. கூட பாஸ் செய்துவிடுவான் என்று தோன்றுகிறது. உண்மையிலேயே அவனுக்குக் கணக்கில் ஏற்பட்டிருக்கும் ஒரு புரட்சியைப் பார்த்தால் எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது.

இரண்டாவது உதவி உபாத்தியாயருக்குக் கொஞ்சம் ஸங்கீதப் பயிற்சியுண்டாம். ஆகவே முதலியார் வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு அவர் ஹார்மோனியம் சொல்லிக்கொடுக்கிறார். இதற்கெல்லாம் "கிம்பளம்",

உண்டு. பள்ளிக்கூடத்துச் சம்பளம் ஆறுமாதத்திற் கொருமுறை வந்தாற் கூட அவர்களுக்கு அக்கரையில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் 'கிம்பள' மின்றி சம்பளத்தையே எதிர்பார்க்கும் ஏழை உபாத்தியாயர்களின் ஸ்திதியை நினைக்கும்போது பரிதாபப்படாமல் இருப்பதற்கில்லை. ஊரோ புதிது. குடும்பமோ பெரிது. நான்கு ஐந்து ஜீவன்கள் உயிர்வாழவேண்டும்! பார்க்குமுக மெல்லாம் வேற்று முகம். யாரும் நம்பி பைஸா கடன் கொடுக்க மாட்டேனென்கிறார்கள். அவர்கள் காலையில் எழுந்தால் அடுப்பு புகையும் மார்க்கத்தைக் கவனிப்பதா? பாட சாலையைக் கவனிப்பதா? இப்படிப் பட்ட ஸ்திதியில் ஆறுமாதத்திற் கொருமுறையோ எட்டு மாதத்திற் கொருமுறையோ 'டீச்சிங் கிராண்ட்' ஸாங்ஷன் செய்தால், பாவம், அவர்கள் என்னதான் செய்வார்கள்?

டியூஷன் வேளை தவிர மீதி வேளை களில் சீட்டுக் கச்சேரி நடக்கும். நான்காவது 'கைக்கு' நான்தான் அழைக்கப்படுவேன். நான் எங்காவது ஒன்றிரண்டு நாட்கள் வெளியூருக்குப் போய்விட்டால் அவர்கள் ரொம்பவும் திண்டாடிப்போய் விட்டதாகச் சொல் வார்கள். வெயில் காரணமாக ஒரு அரைமணிநேரம் பிள்ளைகளைப் பாட சாலையிலேயே மடக்கிவைப்பார்கள். கொஞ்சம் வெயில் குறைந்தால் தோப் பில், ஒன்றிரண்டு, வாய்பாடு, டிரில், சொல்லி அனுப்பி விடுவார்கள். இதற் கெல்லாம் உபாத்தியாயர்கள் வேண்டு மென்பதில்லை. எல்லோரையும் சட் டாம்பிள்ளை கவனித்துக் கொள்வான்.

இதை உலகத்தில் நடைபெ றும் அதிசயங்களில் ஒன்றென்று சொல்வதில் என்ன ஆச்சர்யமிருக்கி றது.

அன்று ஹெட்மாஸ்டர் வீடு வீடாக ஏறி இறங்கிவிட்டு "ஸார்!" என்று கூப்பிட்டுக்கொண்டே எங்கள் வீட் டிற்கும் வந்தார்.

"என்ன இவ்வளவு காலையில்?" நான் இன்னும் காபிகூடச் சாப்பிட வில்லையே! அத்துடன் இன்று சமை யல் வேலை வேறு பிடித்துக்கொண் டது. மத்தியானம் வைத்துக்கொள் ளலாமே" என்றேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை ஸார்! இன்று இன்ஸ்பெக்டர் வருகிறாராம். தகவல் கிடைத்திருக்கிறது. மணி யைக் கொஞ்சம் ஸ்கூலுக்கு அனுப்ப வேண்டியது. என்ன பண்ணுகிறது ஸார்! அத்துடன் இப்பொழுது வந்தி ருக்கும் இன்ஸ்பெக்டர் ரொம்பவும் பச்சை மிளகாய் என்று கேள்வி. உபாத்தியாயர்களுடைய கஷ்ட நஷ் டம் தெரியாதவராம்" என்றார்.

"அப்படியா? அவர் பெயர் என்ன? எந்த ஊர்? தெரியுமா?" என்றேன்.

"ஊர் கீ ரெல்லாம் தெரியாது. டி. ராமநாதனாம். டீச்சர்ஸ் காலேஜில் இருந்தவராம்" என்றார்.

'ஓஹோ! அவனா? எனக்கு நன்றாய்த் தெரியுமே அவனை! கொஞ்சம் கருப் பாய் குள்ளமாய் இருப்பான். நானும் அவனும் 'கிளாஸ்மேட்' கூட. அவனா? எனக்கு ரொம்பவேண்டியவனா யிற்றே!" என்றேன்.

ஹெட்மாஸ்டருக்குச் சிறிது தைரி யம் வந்தமாதிரி இருந்தது. "அப் படியானால் ரொம்ப நல்லதாய்ப் போய் விட்டது. சொல்லியனுப்புகிறேன், அவசியம் ஸ்கூலுக்கு வாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட் டார்.

மத்தியானம் இரண்டு மணிக்கு, இரண்டு பிள்ளைகள் ஓடோடியும் வந்து பாடசாலைக்கு இன்ஸ்பெக்டர் வந்திருப்பதாயும் என்னை அழைத்து வரச் சொன்னதாகவும் சொன்னார்கள். நானும் போனேன்.

உண்மையில எனக்கு ஆச்சர்யமாகத்தான் போய்விட்டது. பிள்ளைகளின் சப்தமே இல்லாமல் வெறிச் சென்றிருந்த இடத்தில் 50, 60 பிள்ளைகள் காச்சு மூச் சென்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்களென்ருல் நான் உண்மையில் அந்த ஹெட்மாஸ்டரின் ஆள் சேர்க்கும் திறமையைப்பற்றி ஆச்சர்யப்படாமலிருக்க முடியவில்லை.

அங்கு வந்திருந்த இன்ஸ்பெக்டர் நான் குறிப்பிட்ட, எனக்கு வேண்டியவரான, அதே ராமனுதன்தான். கொஞ்ச நேரம் இருவரும் குசலப்ரச்னம் செய்து கொண்டோம். பிறகு அவர் "இன்ஸ்பெக்டர்" வேலையில் ஈடுப்பட்டார்.

அது கோடைகாலம். "பிள்ளைகள் வெயிலில் குதிக்காமலிருக்கப் பகல் வேளைகளில் வீட்டு வேலைகள் கொடுத்தனுப்ப வேண்டும். நான் போன இடங்களிலெல்லாம் பெற்ருேர்களிடமிருந்து இதே 'கம்ப்ளெய்ண்ட் தான்." என்ருர் இன்ஸ்பெக்டர்.

"கொடுத்துக் கொண்டுதான் வருகிருேம்.' என்ருர் ஹெட்மாஸ்டர்.

அப்பொழுது தான் வழக்கமாகப் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் வந்தார்கள்.

"இவர்கள் யார்?" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"பாடசாலைப் பிள்ளைகள் தான்" என்ருர் ஹெட்மாஸ்டர்.

"என்ன பலகை புத்தகம் ஒன்றையுங் காணுேமே? என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இதோ உட்காரும் பலகையின் கீழே இருக்கிறது "என்று சொல்லிக் கொண்டே, வந்தவர்கள் பலகையின் கீழே யிருந்த பலகை புஸ்தகங்களை எடுத்துக் காண்பித்தார்கள்.

"ஏன், இங்கேயே வைத்து விட்டுப்போய் விட்டீர்களா?" என்று வினவினுர் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம் ஸார்! வாத்தியார்தான் எங்களை இங்கேயே வைத்து விட்டுப் போய் விடச் சொல்லுகிருர்." என்றனர்.

"பார்த்தீர்களா வீட்டுப் பாடம் கொடுக்கும் லக்ஷணத்தை! அதெப்படி யாவது கிடக்கட்டும். 100 பிள்ளைகளுக்கு 60 பிள்ளைகள் ஆஜர். இந்த லக்ஷணத்திற்கு மூன்று உபாத்தியாயர்கள். ஐந்தாவது வகுப்பில் பையன்களையே காணுேம். இவர்களுக்கு என்ன வேலை என்று கேட்கிறேன். மூன்ருவது உபாத்தியாயர் அதிகம் தான். ஆகவே இந்தப்பாடசாலைக்கு இரண்டு உபாத்தியாயர்கள் போதும் என்று நினைக்கிறேன்" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"ஐயையோ! அப்படி யெல்லாம் ஒன்றும் செய்து விடாதீர்கள். நீங்கள் வருஷத்தில் ஒரு நாளோ இரண்டு நாட்களோ வந்து விட்டுப் போகிறீர்கள். அதனுல் இவ்வளவு சொற்ப ஆஜர் தான் போலிருக்கிறது என்று நினைக்கிறீர்கள். தினமும் வந்து பார்த்தால் விளங்கும் உண்மை" என்றேன் நான்.

சிறிது நேரம் அமைதி; பிறகு நான் இன்ஸ்பெக்டரை நோக்கி "என்ன ஸார்! நீங்கள் எங்கேயோ நகரங்களில் உட்கார்ந்து கொண்டு சொல்லி விடுகிறீர்கள். எவன் ஐயா, தன் பிள்ளையை ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிருன்? மாடு, மணிலாக் கொட்டை, அறுவடை என்று எதாவது வேலைக்குப் பிள்ளைகளை நிறுத்திக் கொண்டு விடுகிருர்கள். அத்துடன் ஆதித்ராவிட ப்ரச்னையில் அநேக பிள்ளைகள் நின்று விடுகிருர்கள். பாவம் அந்த உபாத்தியாயர்கள் என்ன செய்வார்கள்! அவர்

களும் வீடு வீடாய்ச் சென்று கூப்பிடுகிறார்கள். யார் அனுப்புகிறார்கள்? நீங்கள் என்னடா என்றால் இதை யெல்லாம் யோசித்துப் பார்க்காமல் உபாத்தியாயர்களைக்கோபித்துக் கொள்கிறீர்கள்!" என்றேன்.

"எங்களுக்கும் இதெல்லாம் தெரிந்துதான் இருக்கிறது. என்ன செய்வது? எங்களுடைய கடமை நாங்கள் இப்படித்தான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. இங்கு மாத்திரமா இது? நூற்றுக்கு 75 விகிதம் இப்படித்தானிருக்கிறது. அந்தப் பெற்றோர்கள் ஹைஸ்கூல்களில் இதை யெல்லாம் பார்க்கிறார்களா? என்னமோ, என்றைக்குப் பெற்றோர்களின் மனோபாவம் பரிபக்குவமடைகிறதோ அன்றுதான் நம் நாட்டு ஆரம்பப் பாடசாலைகளுக்கு விமோசனம்" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

உபாத்தியாயர்களும் அப்பாடா என்று தாராளமாக மூச்சுவிட்டார்கள்.

A VALUABLE ADVICE TO THE READERS.

—Readers are requested to help us in making this prescription known to one and all young and old, rich and poor, by showing this paper to your friends, relatives and neighbours. By doing so they will be doing a good service to their motherland.

I AM the son of a respectable and well-to-do man. In my prime youth, due to self-negligence I fell a prey to various diseases I secretly sent for medicines from gynecologists whose grand eloquent advertisements resounded in the newspapers, but of no avail I gave up all hopes and longed for death. By chance fortune knocked at my door. I happenen to go to Kashmir on business. One evening while airing I happened to reach the foot of a mountain two miles from Sri Nagar. Suddenly I saw a Hairy Mahatma coming towards me. Seeing me in a hopeless condition and shivering with cold he inquired the nature of my illness in such a loving tone that I confided in him my long hidden secret. The Mahatma took me to his cottage and there dictated to me a prescription,

ALMIGHTY TO WITNESS: I prepared the prescription, one in the form of tonic pills and the other in the form of a message oil. Only a week's treatment cured me. Although by the virtue of this short treatment I could find it too hard to restrain myself, yet I was compelled by the virtue of this short treatment I could find it too hard to restrain myself, yet I was compelled by the Mahatma to undergo the full course for 15 days which gave me a manly vigour and new youth. Before parting with the prescription, the Mahatma had made me promise that if I were relieved of my trouble I would place my services for welfare of Mankind. According to my promise I am advertising this medicine in every nook and corner of India. This medicine cures like magic all diseases such as loss of manly power, weakness, diabetes, weakness of nerves and veins. In short this medicine gives true health and vigour. If you want to enjoy the prime of your youth in old age, you must try this medicine. It can be taken in any season. It does not contain any harmful or intoxicating ingredient.

Price for 15 days course :—

Kashmirian Pills	Rs. 3/8/-
Kashmiri Massage Oil	Rs. 2/8/-

Purchasers of both medicines at a time get free postage & packing.

I am not a doctor or a Vaid nor this is my occupation. This medicine has saved me from the jaws of death. It is a sin for me to make any profits from the sale of this medicine according to the behests of the Mahatma. Address :

L. Hazari Lall Chawla,

PATHANKOT CITY. (INDIA)

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

35 வருடங்களாக உலகப் பிரசித்தி பெற்ற **ஸ்ரீ அம்பாள் நெ. 1. பட்டணம் பொடியை** உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள். காரம், மணம், குணத்தில் நிகரற்றது. மாதம் ஒன்றானாலும் குணம் குறையாதது. எங்கும் கிடைக்கக் கூடியது.

ஸ்ரீ அம்பாள் & கோ.,

தபால் பெட்டி நெ. 3, மதராஸ்.

"Wanted Candidates

to learn Homoeopathy, Biochemistry & Matteism. Excellent Postal tution. Books supplied free. Fees Rs. 40/-. Six months course. Diplomas awarded. Apply with four annas stamps for full details to

The Ragland's Eastern Medical College,

THENI S. I. R."

அழகிய கண்ணாடி க்ளாக்

(FANCY GLASS CLOCK)



வெள்ளை வெளேரென்ற சுவற்றில், பச்சைக் கண்ணாடி சிகப்பு எழுத்துக்களுடன் கூடிய இந்த கடிகாரத்தை மாட்டினால், பளிச்சென்று பிரகாசிப்பதோடு, சுவற்றிற்கு வெகு அலங்காரமாயிருக்கும். நல்ல சப்தமுடையது. நன்றாகவேலை செய்யக்கூடியது. 6'' x 6'' அளவுள்ளது.

விலை ரூ. 6/-

தபாற் செலவு பிரத்தியேகம்.

ORIENTAL FANCY STORES.

POST BOX No. 12204. CALCUTTA. (S. E. 153)

என் விதி

R. சேதுராமன்

பெரியவர்கள் வாக்கு ஒருக்காலும் பொய்யாகாது என்பது என் விஷயத்திலும் பலித்திருக்கிறது. அவர்கள் சொன்ன 'எல்லாம் விதிப்படி நடக்கும்' என்ற சொல் முற்றிலும் உண்மை. இல்லாவிட்டால் நான் என் இப்படி ஒரு அடங்காப் பிடாரி மனைவியிடமும், பிடிவாதமே உருக் கொண்டாற் போல் இருக்கும் என் தாயாரிடமும் அகப்பட்டுக் கொண்டு முழிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் என் விதிதான் காரணம்.

எனக்கு மட்டும் கலியாணம் செய்து கொள்வதற்கு முந்தியே உலக அனுபவம் ஏற்பட்டிருக்குமாயின் நான் கலியாணமே செய்து கொண்டிருக்கமாட்டேன். கலியாணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகளைப் பெற்ற பிற்பாடு அதைப்பற்றி யோசித்தால் என்ன பிரயோசனம்? என்னமோ உரலுக்குள் தலையை விட்டுக் கொண்டாயிற்று. இனிமேல் உலக்கைக்கு பயந்தால் முடியுமா! சில சமயங்களில் எனக்குப் பயித்தியம் பிடித்து விடுகிறதென்றே சொல்ல வேண்டும். மனதுள் ஒரு பெரிய குழப்பம் உண்டாகி விடுகிறது. அது என்னவென்றால் மனைவி சொற்படி நடப்பதா, தாயார் சொற்படி நடப்பதா என்பதுதான் கடைசியில் அவர்கள் இருவருள் யார் பலசாலியோ, அவருடைய சொற்படிதான் நடக்கும்படி நேரிடுகிறது. யோசித்துப் பார்த்தால் யார் சொல்வது தப்பு என்று தீர்ப்பு சொல்வது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. இருவர் சொல்வதும் நியாயமாகவும் தப்பாகவும் தோன்றுகிறது.

ஒரு நாள் என் தாயார் என்னிடம் வந்து, "அடே, எல்லாம் நீ கொடுக்கிற இடந்தாண்டா உன் பெண்டாட்டிக்கு! அவள்தான் வீட்டுக்கு எஜமானியாகிவிட்டாள் போலிருக்கிறது! நான் மட்டும் வேலைக்காரி! அப்படித்தானே? நீ அவளை சரியாய்க் கண்டித்துக் கொண்டிருந்தால் அவளுக்கு இவ்வளவு தைரியம் வருமா? காலையில் 7 மணிக்குத்தான் எழுந்திருப்பதோ? என்னடா பேசாமலிருக்கிறாய்?" என்று கூக்குரலிட்டாள். நான் பேசாமல் பின் என்ன செய்வது? அவள் சொல்வதும் நியாயம் போலத்தான் என் மனதில் பட்டது. என் மனைவி மேல் குற்றம் இருப்பதாகவும் தோன்றிற்று. எனக்குக் கோபமும் வந்து விட்டது.

"இருக்கட்டும், அவளை உதைக்கிறேன். எது, வரவரக் கெட்டுப் போய் விட்டாற் போலிருக்கிறது" என்று நான் என் மனைவியைக் கோபித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும்தான் தாயாருக்குக் கொஞ்சம் திருப்தி வந்தது. ஆனால், அதே சமயம் என் மனைவி அந்த இடத்திற்கு வந்து, "என்ன சொன்னீர்கள்? உதைக்கப் போகிறீர்களா, யாரை உதைக்கப் போகிறீர்கள்? என்னையா? நீங்களா? ஏன்? இராத்திரி எல்லாம் குழந்தைகள் அழுவதையும் நான் அவர்களுடன் கஷ்டப்படுவதையும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள்! இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருந்தால் ஒருத்தி விடியற்காலையில் கொஞ்சமாவது அயர்ந்து தூங்க வேண்டாமா? என்னமோ கொஞ்ச நாழி கழித்து எழுந்தால் பிரமாதப் படுத்துகிறீர்

கனே!" என்று எனக்கு ஒரு 'டோஸ்' கொடுத்தாள். இப்போது நான் யாருக்குப் பரிந்து பேசுவது, மனைவி சொல்வது முற்றிலும் நியாயம் என்று நிச்சயமாகத் தெரிந்தது. பிறகு என் தாயாரைத் திரும்பிப் பார்த்தேன். அவளுக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இப்படி நான் ஒன்றும் செய்ய முடியாமல், என் மனைவியையும், தாயாரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கையில் என் தாயாருக்கு அசாத்ய கோபம் வந்துவிட்டது. அரை நொடியில் உள்ளே போய் ஒரு மூட்டையை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு என்னிடம் வந்து "போதும் போதும், உன்னைப் பிள்ளையாய்ப்பெற்றதற்குப் பலன் போதும்! நான் இதோ காசிக்குப் போய், கங்கையிலே அப்படியே இறங்கி விடுகிறேன். பிறகு நீயும் உன் பெண்டாட்டியுமா கூடிக் குலாவுங்கோ! உங்கள் அப்பா போன போதே நானும் மடிஞ்சு போயிருக்கணும். எனக்கு இன்னும் யமன் வரவில்லையே" என்று தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு, ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள். அதைப் பார்த்ததும் எனக்கு இது எதடா சனியன் ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டதே என்று தோன்றிற்று. இந்த சமயத்தில் என் அம்மாவை சமாதானப் படுத்த என் மனைவியைக் கொஞ்சம் சூடாகவே கோபித்துக் கொண்டேன். அவ்வளவுதான், அவளும் முறைத்துக் கொண்டு கைக்குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு, மூத்த பையன் ராமுவைக் கையில் பிடித்துக் கொண்டு ஒருவிதமான முறைப்புடன் என்னைப் பார்த்து "நான் இந்த வீட்டிலே இனிமேல் அரை நிமிஷங்கூட இருக்க மாட்டேன்" என்று சொல்லித் தன் பிறந்த வீட்டிற்குப் புறப்பட ஆரம்பித்தாள். இவர்கள் இரண்டு பேரும் இப்படிக் கிளம்பினதால் நான் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தேன். கடைசியில் என் மனைவியும் பிறந்தவீடுபோகவில்லை; என் தாயாரும் கங்கையில் இறங்கிவிட வில்லை. அவர்கள் இருவரையும் ஒருவாறு சமாதானப் படுத்தினேன். தாயாருக்குத் தெரியாமல் மனைவியையும் மனைவிக்குத் தெரியாமல் தாயாரையும் 'காக்கா' பிடித்தேன். பின் வேறு என்ன செய்வது?

அன்று இரவு வெகு நேரம் வரையில் ஆழ்ந்த யோசனையில் இருந்தேன். எப்படி இந்த இரண்டு சனியன்களையும் கட்டி மாரடிப்பது என்பதுதான் கவலை. தாயாரைத் திருப்தி செய்ய வேண்டுமானால் மனைவியை விரோதம் செய்து கொள்ளாமல் முடியாது. அதிகாலையில் என் மனைவி எழுந்துவீட்டுக்காரியங்களையெல்லாம் செய்து வைத்தால்தான் என் தாயார் சந்தோஷப்படுவாள். அது என்னவோ ஆகாத காரியம். அடுத்த நிமிஷமே என் மனைவி தன் பிறந்த வீட்டுக்குப் போய்விடுவாள். இந்த அவஸ்தைக்கு என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. முடிவில் ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். அதன்படி நடக்கவும் ஆரம்பித்தேன். விடியற்காலையில் நானே எழுந்திருந்து பாத்திரங்களைத் துலக்கினேன் தெருப்புறத்தையும் சாணந் தெளித்துப் பெருக்கவும் செய்தேன். வேலைகளையெல்லாம் பொழுது விடியுமுன்னதாகவேசெய்து விட்டுமறுபடியும் போய்ப் படுக்கையில் படுத்துக் கொள்வேன். மறுநாள் முதல் என் தாயாருக்கு என்னிடத்தில் அதிக சந்தோஷம் உண்டாய் விட்டது. "அப்படித்தான் இருக்க வேண்டும் புருஷன் என்றால் கண்டித்தால் தான் பெண்டாட்டிக்குப் புத்திவரும்; அப்போதுதான் வழிக்கு வருவாள்; இப்போது பார், வீட்டு வேலைகளெல்லாம் எப்படி நடக்கிறதென்று!" என்று என் தாயார் பெருமை அடித்துக் கொண்டாள். என் மனைவியோ, "வீட்டுக்குத் தாயாரென்றால் அப்ப

டித்தான் வேலைகளைச் செய்ய வேண்டும். நீங்கள் அவளுக்காக இனிமேல் சிபார்சுக்கு வரவேண்டாம். இஷ்டமில்லாவிட்டால் அவள் காசிக்குத்தான் போகட்டும், அல்லது ராமேஸ்வரத்துக்குத்தான் போகட்டும்'' என்று எனக்கு உத்தரவிட்டாள். நான் வெட்கக்கேட்டை வெளியில் சொல்லாமலிருக்கும்படி ஆயிற்று. எப்படியாவது வீட்டில் சச்சரவு இல்லாமலிருந்தால் அதற்காக என் உயிரையும் கொடுக்கத் தயாராய் இருந்தேன்.

ஒருநாள் நான் விடியற்காலையில் வீட்டுப் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருக்கும் போது என் தாயார் படுக்கை அறையிலிருந்து எழுந்திருக்கும் சத்தம் கேட்டது. உடனே எனக்கு திகில் உண்டாயிற்று. அப்படியே பாத்திரங்களை வைத்துவிட்டுப் போய்விட்டால் எனக்கும் என் மனைவிக்கும் ஆபத்து உண்டாகும். மேலும் நான் தெருப்புறத்தைக் கூட்டிப் பெருக்கவும் இல்லை, என்ன செய்வது? நான் மெள்ள அடிமேல் அடி வைத்துக் கொண்டே யாதொரு சந்தடியும் செய்யாமல் தெருப்பக்கம் சென்று விளக்குமாற்றால் பெருக்க ஆரம்பித்தேன். பொழுதும் விடியவில்லை. ஆதலால் என் தாயார் மறுபடியும் தன் படுக்கை அறைக்குள் போய் விடுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் காரியம் வேறு விதமாக முடிந்து விட்டது. எப்படியோ என் தாயாருக்கு ஒரு சந்தேகம் உண்டாகி விட்டது. நான் மெள்ளமாக நடந்தேன் என்றாலும் அவளுடைய பாம்புச் செவியில் அதுவும் கேட்டுவிட்டது. யாரோ ஒரு திருடன் வீட்டிற்குள் வந்துவிட்டு வெளியே போகிறான், என்று நினைத்துக் கொண்டாள் போலும்! அவ்வளவுதான், உடனே ஒரு பெரிய சத்தத்தோடு ''திருடன்! திருடன்! அடே சாமா, (என்னுடைய செல்லப் பெயர்) திருடண்டா, அடி, பட்டு! உன் புருஷனை எழுப்படி, திருடண்டி'' என்று கத்திக் கொண்டே என்னைத் துரத்திக் கொண்டு வந்தாள். நான் விளக்குமாற்றைக் கீழே வீசியெறியத் தோன்றாமல் தெருவில் ஓட்டம் பிடித்தேன். வீட்டு வேலைகளைச் செய்தவன் நான்தான் என்று என் மனைவிக்கும் தாயாருக்கும் தெரியக்கூடாதென்பதுதான் என் விருப்பம் போதாத வேளைக்கு எல்லாம் பொல்லாங்காய்த்தான் முடியுமல்லவா!

எனக்கு அப்பொழுது இருந்த திகிலில் ஒன்றுமே தெரியவில்லை. இதற்குள் 'பிடி, பிடி' என்று ஊர் ஜனங்கள் என்னைத் தொடர்ந்தார்கள். சிலர் கடைசியில் என்னைப் பிடிக்கவும் செய்தார்கள். பலர் என்னை அடித்தார்கள். அப்போது நான்பட்ட அடிகளும் உதைகளும் இவ்வளவென்று சொல்ல முடியாது. என்னைக் கையும் பிடியுமாகப் பிடித்து என் வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். நல்ல வேளையாக நான் வரும் வழியில் துடப்பக் கட்டையைப் போட்டு விட்டேன். இதற்குள் வெளிச்சம் வந்து விட்டது. என் தாயார் என்னைப் பார்த்து ஆச்சரியத்தோடு ''எதுக்கு எல்லாரும் உன்னைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்? நீ இத்தனை நாழி எங்கே போயிருந்தே?'' என்று கேட்டாள். என் மனைவியோ தன் தலையிலடித்துக் கொண்டு, ''கிரகசாரம், இவ்வளவு மக்காயிருப்பாரோ ஒருத்தர்'' என்று என்னைப் பரிகாசம் செய்தாள். அங்கு கூடியிருக்கிற ஜனங்களுக்குமட்டும், என் விஷயம் ஒன்றுமே தெரியாது. உண்மையைச் சொன்னால் அவமானம் யாருக்கு? ஆகவே நான் ஒரு யுக்தி செய்து அதன்படி பதிலளித்தேன்'' உங்கள் எல்லோருக்கும் என்ன பைத்தியமா பிடித்து விட்டது. என் வீட்டில் நுழைந்த திருடனை நான் துரத்திக் கொண்டு போனால் அவனைவிட்டு

விட்டு என்னைப் பிடித்துக் கொண்டு அடித்தீர்களா! இருக்கட்டும் நான் உங்களைச் சும்மாவிடப் போகிறதில்லை. உங்கள்மீது பிராது கொடுக்கிறேன்'' என்று தைரியமாக அதட்டிவிட்டு என்னைப் பிடித்து அடித்தவர்களுடைய பெயரையெல்லாம் ஒரு காகிதத்தில் எழுத ஆரம்பித்தேன். உடனே எல்லாரும் என்னிடம் பயந்து கொண்டு, மன்னிப்புக் கேட்க ஆரம்பித்தார்கள். கடைசியில் போனால் போகட்டும் என்று அவர்களை மன்னித்துத் தொலைத்தேன்.

ஆனால் உண்மையை என் மனைவிக்குமட்டும் தெரிவித்தேன். அவள் என்மேல் பரிதாபம் கொண்டாவது வீட்டு வேலைகளைச் செய்வாளென்று எதிர் பார்த்தேன். ஆனால் அதற்கு மாறாக அவள் என்னைக் கண்டபடி திட்டினாள். விஷயம் என் தாயார் காதிலும் எட்டிவிட்டது. அவளுக்கும் என்மீது அசாத்திய ஆத்திரம் வந்து விட்டது. எனக்கும் பயம் உண்டாகி விட்டது. ஏதேது, இனிமேல் இவர்கள் இரண்டுபேரும் வீட்டில் இருந்தால் எனக்கு ஆபத்து உண்டாகும். மேலும் என் தாயாருக்கும் என் மனைவிக்கும் ஒரு பெரிய யுத்தம் ஆரம்பித்துவிடும். ஆகவே முடிவாக ஒரு ஏற்பாடு செய்தேன், அதன்படி தான் இதுவரையிலும் நடந்து வருகிறது.

என் மனைவியைப் பிறந்த வீட்டிற்கு ஒவ்வொரு வருஷமும் அனுப்பிவந்தேன். ஒவ்வொரு தடவையும் குறைந்தது ஆறுமாதம் இருந்து விட்டு வருவாள். அந்த ஆறுமாத காலமும் என் தாயார் என்னுடன் இருப்பாள். என் மனைவி வந்ததும் என் தாயார் ஸ்தல யாத்திரைக்குக் கிளம்பி விடுவாள். அவள் யாத்திரைக்குப் போய்விட்டு வந்ததும் என் மனைவி பிறந்த வீட்டிற்குக் கிளம்பி விடுவாள். இப்படி மாற்றி மாற்றி நான் அவர்களோடு மாரடித்துக் கொண்டு வருகிறேன். இது மாதிரி நான் அவஸ்தைப்பட வேணும்னு, என் தலையில் எழுதியிருக்கிறது போலிருக்கிறது. நான் என்ன செய்வது. எல்லாம் விதிப்படி நடக்கும் என்று 'கம்' மென்று இருக்க வேண்டியதுதான்.

3 கடியாரங்களும், 602 அழகிய சாமான்களும்
விலை ரூ. 1-6-0 தான்



நாங்கள் தயாரித்துள்ள ஆட்டோ ரோஸ் பாட்டில்களில் 4-வது அல்லது 4 பாட்டில்கள் படை மருந்தாவது ஒரே தரம் ரூ. 1—6—0க்கு வாங்குபவர்களுக்கு ஒரு ரயில்வே டைம் டம்மி பாக்கட் வாட்சும், ஒரு தங்க கில்ட்டுடைய டம்மி ரிஸ்ட் வாட்சும், 1 சேப்டி ரேசர், 1 பிரஷ், 1 சீப்பு, 1 கண்ணாடி, 1 பவுடர் பாக்கட், 1 செட் ரோல்டு கோல்டு பொத்தான், 1 கைகுட்டை, 1 பவுண்டன் பேனா நிப்புடனும், 1 ரோல்டு கோல்டு மோதிரம், 1 டார்ச் லைட் அல்லது 1 பி. டைம்பீஸ் உறுதியான சாமான்களுடனும் 5 வருஷம் உத்திரவாதம் உள்ள முதலியன அனுப்பப்படும். தபால் செலவு அணா 12 தனி.

THE NATIONAL WATCH Coy., :: Post Box No. 12210, Calcutta.

தருமபூமி

எஸ். ஏ. மருதையன்

அத்தியாயம் 48

இடி விழுந்தது

பாட்டு வாத்தியார், வேதவதி தன் போதனைக்கு இணங்கியது கண்டு சந்தோஷத்தோடு ஆனந்த பவனம் சென்று அன்னபூரணியிடம் தெரிவித்தார். அடுத்தாற்போல் வேதவதி கணபதியிடமிருந்து பிரியாதது கண்டு அன்னபூரணிக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. அவ்வளவும் கணபதியால் தான் நடைபெறுகிறது என்று நினைத்துக் கொண்டு கணபதியிடம் வந்தாள். "ஏண்டாப்பா! எத்தனை நாளாய்த் தவமிருந்தே, இப்படி யெல்லாம் மானத்தைக் கெடுக்கணும்னு" என்று முதலிலேயே எரிச்சலோடு கேட்டாள்.

கணபதி சிறிதும் விட்டுக் கொடுக்காமல் "அப்படி இங்கே யாரு மானம் கெட நடந்துகொண்டேன்?" என்று உறுத்தலாய்க் கேட்டான்.

அன்னபூரணி "ஊம்!" என்று சொல்லிவிட்டு மேலும் தொடர்ந்து, "உனக்கு ஒரு புளிப்பாய்ப் போச்சா? அதனுலே தான் அம்மா வேண்டாம், அப்பா வேண்டாம், தங்கை வேண்டாம், பெண்டாட்டி வேண்டாம்னு எழுந்து வந்தவளே பெரிசுன்னு இருக்கறயோ?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

"நான் யாரையும் வேணும் வேண்டாம்னு சொல்லலே! வேணும்னு இன்றைக்கே வந்துவிடுங்கள்"

"ஓஹோ! எழுந்துவந்தவளோடே நாங்களும் கூடிக் குலாவணுமா?"

"அவள் எழுந்து வந்தவளல்ல; வீணுக்கு என் பாவம், அந்தப் பெண்ணைக் கரிக்கிறே?"

"எழுந்து வந்தவளில்லே; உத்தம பத்தினி ஊர்கோலம் வந்தவள்! ஏண்டா முழுப்பூஷணிக்காயை சோத்திலே மறைக்கிறே? இதெல்லாம் நிலேக்காதுடா! சொன்னுல் கேளு! பேசாதெ வீட்டுக்கு வாடா! பெரிய குடியிலே பிறந்த நமக்கெதுக்குடா இந்தசின்னப் புத்தி? பேசாதெ அவளை விரட்டி விட்டு வீட்டுக்கு வாடா!"

"இங்கே விரட்டுகிறது கிரட்டுகிறது ஒண்ணும் இல்லே. வேணும்னு எல்லோரும் நாளைக்கே வர்றதுன்னு வாங்க; இல்லேன்னு சட்டைக்காரிலோலனிடத்திலேயே இருந்துக்குங்கோ" கணபதி மேலே தாயோடு வார்த்தையாட சம்மதமில்லாதவனுய் எழுந்து வெளியே போகலானுன்.

அப்போது உள்ளிருந்த வேதவதி மேற்கண்ட பேச்சுக் குரல்களைக் கேட்டுத் திடுக்கிட்டுப்போய்க் கலவரத்தோடு கூடத்துக்கு வந்தாள். அடுத்த கணத்தில் தன்னெதிரில் அன்னபூரணி கோபாவேசமாய் நின்றுகொண்டு தன்னைப் பேசினது இடி விழுந்தது போல் கேட்டது.

"ஏண்டி எரிமூஞ்சி! எங்க வயித்தெரிச்சலைக் கொட்டிக் கொள்ள எங்கேயிருந்தடி தோணினே?ஒரு கூடைத் தீயை வயத்திலெ கொட்டின மாதிரி ஆக்கிவிட்டாயேடி!........."

அடுத்தக்ஷணத்தில் கணபதி வெளியேயிருந்து வந்து ஆத்திரமாக "அம்மா! நீ வேதத்தைப் பேசாதே, வேணும்னு என்னை ஆயிரம் பேசு! ஆமாம்!" என்றான்.

"இருக்குண்டா அப்பா இருக்கும்! உன்னைச் சொல்லி என்ன? மயக்க மருந்து, மாயமருந்து போட்டு மயக்கினாளே அவளைச் சொல்லணும்......... ம்...ஹூம்......! நான் யாரை எதுக்காகப் பேசப்போகிறேன்? சுகமாயிருந்துக்கோடா அப்பா!"

அன்னபூரணி வெறுப்போடு வெளியேறுகிறாள். கணபதி உண்மையை உரைக்க வெண்ணி, "அம்மா! அம்மா!! வாயேன், சொல்றேன்!" என்று கூப்பிட்டான்.

ஆனால் அன்னபூரணி வீரத்தோடு திரும்பி நின்று "அம்மான்னு சொல்ல வெட்கமில்லே? உன்னை மகனாகவேறே பாவிக்கவா? நீ தான் பாம்பு கடிச்சு செத்தவனாச்சே!" என்று சொல்லி விட்டுப் போய்விடுகிறாள். கணபதிக்கு சஹிக்கமுடியாத உள்ளக்கிளர்ச்சி யேற்படுகிறது. தன்னை மறந்து தனிமையை நாடுகிறான். இயந்திரத்திலிருந்த இசைத் தட்டை மீட்டுகிறான்; கிராமபோன் பாட ஆரம்பிக்கிறது. வேதவதி தனிமையில் சித்தப்பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். சுயநலம் கலந்திருந்த இதயத்தில் வசைமொழி என்னும் இடி விழுந்து தூய அன்பை நாட்டுகிறது. "மாதருலகம் மகிமையோங்க" என்ற பார்வதியின் பாட்டில் கல்மிஷமின்றி கவனம் செலுத்தி முடிவில் கணபதியிடம் வந்து நிற்கிறாள்—ஆச்சரியம்!

"கணபதி!" என்றாள் தழுதழுத்த குரலில்.

"வேதம்! என் அம்மா பேசினது பற்றி வருத்தப்படாதே! உட்கார்!" என்று எழுந்து அருகில் நின்றான் கணபதி.

"கணபதி! எனக்கு இப்போதான் தெரிஞ்சுது! இனி முதல் எனக்கு நீ வேறே மாதிரி! என் பிழைப்பும் வேறேமாதிரிதான்! என்று நிர்மலமான சிந்தையுடன் சொன்னாள். அவ்வளவுதான் கணபதிக்கு ஆச்சரியமாயிருந்தது. ஒரு கணத்தில் அவள் நிலையை உணர்ந்துகொண்டவனாய் ஆர்வத்தோடு "வேதம் இன்று தான் என் மனசு நிம்மதி யடைந்தது!" என்று கூறினான். கணபதிபெரியதோர் கார்யத்தை ஸ்தாபித்துவிட்டான்.

புத்தி குழம்பியபோதெல்லாம் கணபதி தன்னைத் தானே திருத்திக்கொண்டு வேதவதியையும் திருத்தினான். அவளுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி வழியனுப்பி வைத்தான். வேதவதி சந்தோஷமாகவே விடை பெற்றுக்கொண்டு திருச்சிவந்தாள்.

* * *

வேதவதியின் செய்கையால், மனமுடைந்து வாழ்க்கையில் வெறுப்புற்று வெளியேறிய வைத்தீஸ்வரமய்யர், வாழ்க்கைக்குத் திரும்பவேயில்லை. அதனால் விபரீதமாய்த் தன் முடிவை நிச்சயித்திருந்த பார்வதத்திற்கு அண்ணா பாட்டு வாத்தியார் ஹிதோபதேசம் செய்தார். கடைசியாக வேதவதி மகத்தான மாறுதலுடன் திரும்பியது பார்வதத்திற்கு அவ்வப்போது சந்தேகமாய்த் தோன்றிக் கொண்டிருந்தது. ஆனால் வேதவதி நாளடைவில், பாட்டு வாத்தியார் உதவி கொண்டு தந்தை நடத்திவந்த வியாபார ஸ்தலங்களை ஒழித்துப் பணமாக்கி எல்லாவற்றையும் பாங்கியில் டிபாஸிட் செய்துவிட்டு "அனாதை மடம்" என்று ஒரு பொது நல ஸ்தாபனம் ஏற்படுத்தி, ஏழைப் பெண்களுக்கும், விதவைகளுக்கும் உதவி தரும்படி பொது நலப்பணி செய்ய முற்பட்டது கண்டு ஊரிலுள்ளவர்களும், பார்வதமும் வேதவதியைப் புனிதமானவளென்று மதித்துக் கொண்டார்கள்.

அத்தியாயம் 49

யார் இவன்?

ராமலிங்கம் பிள்ளையின் பிரிவு ஏற்பட்டபோது "வாழ்விலே வெறுத்தாலும் தாழ்விலே வெறுக்கிறது கூடாது" என்று மாணச் சடங்குகளைச் செய்யப்போனன் கணபதி. குடும்பத்தில் யாரும் அவனைக் கருதவில்லை போல் அவனுக்குத் தோன்றிற்று. தகனக்கிரியை முடிந்ததும் வெளியேறினவன் மீண்டும் திரும்பவில்லை. இதனால் தருமலிங்கம் பிள்ளை கணபதி எங்கே அன்னபூரணி! சாப்பிடக்கூட வரக் காணேமே?" என்று மனைவியைக் கேட்டார்.

